ISSN 2021-9041

Aasiriyam (pedagogy)

# ஆசிரியம்

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

ආසිරියම්

எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

இதழ் 10 பெப்ரவரி 2012 ரூபா 50/=

அதிபர் பாடசாலை பெற்றோர்...

## மெல்லக் கற்கும் மாணவர்கள்

3179 உம் அதன் பின்னரும்...



## தனியார் பல்கலைக்கழகங்களும் வறிய மாணவர்களும்

ஆர்.லோகேஸ்வரன்/ பெ.பேரின்பராசா/ சு.பரமானந்தம்/சபா.ஜெயராசா
மொழிவரதன்/ ஏ.எல்.நௌபீர்/எஸ்.அதிதரன்
அன்பு ஜவஹர்ஷா/திருமதி.எஸ்.அருள்வேல்நாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 மே முதல்
# வெளிவந்துகொண்டிருக்கிறது...




# "AASIRIYAM"

180/1/50 People's Park, Colombo -11
Tel: 011-2331475
E-mail : aasiriyam@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறிவுச் சமூகத்தில் வேட்கை விளைத்திறன் மிக்க ஆசிரியர்"



## உள்ளே...


- இலங்கை கல்வி முறைமையில் தொழில் வழிகாட்டல் — 04
- மெல்லக் கற்கும் மாணவர்களும் கற்பித்தலியலும் — 08
- புதிய நோக்கில் விளைதிறன்மிக்க கற்றல் நுட்பங்கள் — 12
- சிறுவர் கல்வியும் அண்மைக் காலத்தைய... — 17
- 3179 உம் அதன் பின்னரும்...! — 20
- அதிபர் – பாடசாலை – பெற்றோர்... — 23
- தனியார் பல்கலைக்கழகங்களும் ... — 27
- நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள் — 33
- குழந்தைக்கல்வி — 37


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2021-9041

Aasiriyam

# ஆசிரியம்

மாத இதழ் 010

**ஆசிரியர் :**
தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள் :**
அ.ஸ்ரீகாந்தலட்சுமி
எம்.என்.மர்சூம் மௌலானா
காசுபதி நடராசா

**ஆசிரியர்குழு :**
பேரா.க.சின்னத்தம்பி
பேரா.சபா.ஜெயராசா
பேரா.சோ.சந்திரசேகரன்
பேரா.எம்.ஏ.நு·.மான்

**சிறப்பு ஆலோசகர்கள் :**
சுந்தரம் டிவகலாலா
சி.தண்டாயுதபாணி
அன்பு ஜவஹர்ஷா
வல்வை ந.அனந்தராஜ்

**ஆலோசகர் குழு :**
பேரா.மா.கருணாநிதி
பேரா.மா.சின்னத்தம்பி
பேரா.மா.செல்வராஜா
முனைவர் த.கலாமணி
ஆய்வாளர்.தை.தனராஜ்
முனைவர் அனுஷ்யா சத்தியசீலன்
முனைவர் ஜெயலக்சுமி இராசநாயகம்
செ.அருண்மொழி
சு.முரளிதரன்
பொ.ஐங்கரநேசன்
ஓ.எல்.எம்.அஸ்ஹர்

**நிர்வாக ஆசிரியர் :**
சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு :**
கோமளா/மைதிலி

**Printed by: cbc prees**
Tel : 0777 345 666

**தொடர்புகளுக்கு :**
**"Aasiriyam"**
180/1/50 People's Park, Colombo -11
Tel: 011-2331475 E-mail : aasiriyam@gmail.com

## ஆசிரியரிடமிருந்து...

### அறிவுப் பயணம்...

தமிழ்ச்சூழலில் நமது ஆசிரியத்துவத்தின் வழிகாட்டலில் புத்தாக்கமான கருத்தியல் வலயத்தை "அகவிழி" உருவாக்கி வந்தது. இது கல்வியியலில் முன்னேற்றகரமாகவும் மறுமலர்ச்சியாகவும் 76 இதழ்கள் வரை வெளிவந்தது.

தமிழ் இதழியல் வரலாற்றில் குறிப்பாக துறைசார் இதழியல் வளர்ச்சியில் அகவிழி புதுத்தடம் அமைத்தது. அதுமட்டுமல்ல கல்வியியல் சிந்தனையை சகல மட்டங்களிலும் முன்னெடுக்க வேண்டிய சமகால அறிவுக் களஞ்சியமாகவும் முகிழ்த்தெழுந்தது. அனைத்துக் கல்வியியலாளர்களையும் ஒருங்கிணைக்கும் புதுத் தளமாகவும் விரிவாக்கம் பெற்றது.

பல்வேறு காரணிகளால் நமது வழிகாட்டலில் இருந்து அகவிழியைத் தொடர முடியவில்லை. அதனைத் தக்கவைத்துக் கொள்ளவும் முடியவில்லை. இதனாலேயே "ஆசிரியம்" உருவானது.

ஆசிரியம் சமூகச் செயல்முறையின் தேவையாக எழுச்சி பெற்றது. கல்விச் சமூகம் நிலைபேறு கொள்வதற்குரிய அறிவுக் கையளிப்பிலே முதன்மைப் பங்கு வகிக்கவும் தொடங்கியது.

கோட்பாடு மற்றும் நடைமுறை தழுவிய ஆசிரியத்துவத்தையும் பெற்றோர் தழுவிய சமூகத்தையும் ஆசிரியம் உருவாக்க தனது அறிவுப் பயணத்தை ஆரம்பித்தது. இந்தப் பயணத்தில் கல்வியியல் பேராசிரியர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள், கல்வி ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிருவாகிகள் மற்றும் கல்விசார் அக்கறையும் விழிப்புணர்வும் கொண்டோர், சமூக அக்கறையுடையோர் எனப் பல தரப்பட்டவர்களும் இணைந்துள்ளனர். இதுவே நமது பலம். இதனால் புதிய பண்பாடு நோக்கிய மனித அறங்களின் மீது பற்றுக்கொண்டவர்களாகவும் திரண்டுள்ளோம்.

அகவிழியின் 76 வரையான இதழ்களுக்கு மட்டுமே நமது ஆசிரியத்துவ வழிகாட்டல் அமைந்திருந்தது. இனிமேல் வெளிவரும் அகவிழிக்கும் நமக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை. இதனைச் சகலருக்கும் அறியத் தருவது நமது கடமையாகும்.

ஆசிரியம் எல்லையற்று விரியும் அறிவுத் தளமாகப் பரிணாமம் பெறுகின்றது. இது பன்முகப்பாடுகளுக்கும் தனித்துவங்களுக்கும் முன்னுரிமை வழங்கும் கருத்தியல் சாதனமாகவும் வெளிவரும். இதுவரை வெளிவந்த ஆசிரியம், நாம் எவ்வாறு பயணிப்போம் என்பதை தெளிவாக அடையாளப்படுத்துகின்றது. ஆசிரியர்கள் தம்மை இடையறாது புதுப்பிப்பதற்குரிய மாத வாண்மை இதழாக தொடர்ந்து "ஆசிரியம்" வெளிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுய மரியாதை...

சமகாலச் சூழலில் "ஆசிரியத்துவம்" பல்வேறு நெருக்கடிகளைச் சவால்களை முகங்கொடுத்து வருகின்றது. ஆசிரியர் சமூகப் பொறியியலாளர் என்னும் நிலையிலிருந்து தாழ்ந்து வருகின்றார்.

சமூகத்தில் நடைபெற்று வரும் எண்ணற்ற மாற்றங்கள், தொழில்நுட்ப வளர்ச்சி, மாணவர் தேவைகளின் மாற்றங்கள், சமூக எதிர்பார்ப்புக்கள், கல்வியின் புதிய வணிகப் பண்பாடு, கல்வி முறைமை அரசியல் அழுத்தங்களுக்குட்படல், காலனித்துவ நிருவாகக் கட்டமைப்பின் மீளுருவாக்கம் முதலியவை ஆசிரியத் தொழிற்பாடுகள் மீது பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றின் விளைவாக நெருக்கீடுகள் உருவாகின்றன.

தமிழ்க் கல்விச் சூழலில் "ஆசிரியரும் நெருக்கீடும்" இன்னும் பல்வகைப்படுத்தலுக்கும் உள்ளாகிறது. குறிப்பாக வட-கிழக்குப் பிரதேசத்தில் நிலவிய போரியல் வாழ்புலம் மிக மோசமான உளப் பாதிப்புக்களையும் நெருக்கீடுகளையும் உருவாக்கியுள்ளன. எங்கள் மத்தியில் இவை பற்றிய ஆய்வுகள் தெளிவுகள் குறைவாக உள்ளன.

உலக அளவில் ஆசிரியரும் நெருக்கீடும் தொடர்பில் பரவலான ஆய்வுகள் உள்ளன. அவற்றின் தொகுப்பாக சிலவற்றை நாம் பின்வருமாறு கூறலாம்.

பாட அறிவின் போதாமை, வளர்ந்து வரும் அறிவின் போதாமை, தரங்குன்றிய முகாமைத்துவம், நேரம் போதாமை, அதிகளவிலான காகிதவேலை, வேலைப் பழுவின் அதிகரிப்பு, வளப்பற்றாக்குறை, பெற்றோரின் ஒத்துழைப்புப் போதாமை, மாணவரின் ஒழுக்க விழுமியங்களின் வீழ்ச்சி, பாட அறிவு குறைந்தோர் ஆசிரியருக்கு வழிகாட்டல், ஆளுமையற்ற அதிபர் பெருக்கம், கல்வி நிர்வாகத்திற்கு பொருத்தமற்றவர்களின் நியமனம் முதலானவற்றை சுட்டிக்காட்ட முடியும். இவை யாவும் ஆசிரியர்களுக்கு பல்வேறு நெருக்கீடுகளை உருவாக்குகின்றன.

இன்று தமது பதவி காலத்துக்குமப்பால் எப்படியும் அப்பதவியில் அமர்ந்துவிட வேண்டும் என்பதற்காக சேவை நீடிப்புக்காக செய்யும் குத்துவெட்டுக்கள், பின்கதவு அரசியல் சொல்லிமாளா. தமது பதவிக்காக சுயத்துவத்தை, சுயமரியாதையை, ஆளுமையை பலி கொடுக்கவும் தயாராக உள்ள அதிகார ஆசாமிகள், அடிவருடிகள் பெருகிவிட்டனர். இவர்களால்தான் சமூகத்தில் சமூக நீதியும் சமூக அறவிழுமியங்களும் பேணப் போகின்றன?

இந்த மலினமான நச்சுச் சூழலின் ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து நமது கல்வி முறை பாதுகாக்கப்படுமா? நாளைய எதிர்காலத்துக்காக, சுயமரியாதையை வளர்க்கும் சமூகமாக நாம் முன்னேறுவோமா? இது விடைகள் இல்லாத வினாக்களாகவே இந்தத் தருணம் வரை உள்ளது.

### ஆக்க மலர்ச்சி

சமகால கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் உன்னத வெளிப்பாடாக ஆக்கமலர்ச்சிச் சிந்தனை மேலெழுகின்றது. இது மனித முன்னேற்றத்திற்கு ஆதாரமான செயல் முறையாகவும் உள்ளது. அதாவது மரபு வழியான தடத்தை விட்டு மாற்று வழியில் சிந்தித்தலை ஊக்குவிக்கின்றது. புதிய உன்னதங்களைக் கண்டறியவும் பழைய அமைப்புக்களை புதிய உச்சங்களை நோக்கி நிலைமாற்றஞ் செய்யவும் ஆக்க மலர்ச்சிப் பண்பு தூண்டுதலாக அமைகின்றது.

இன்னொருபுறம் பிரச்சினைகளை விடுவிக்கவும் புத்தாக்கங்களை ஏற்படுத்தவும் தனித்துவங்களின் வெளிப்பாடாகவும் ஆக்கமலர்ச்சி உருக்கொள்கின்றது. இந்த அம்சங்களை உள்வாங்கிய கற்றல் - கற்பித்தல் எம்மிடையே உருவாகவில்லை. இதனால் ஆசிரியத்துவம் சிதைக்கப்பட்டு வலுவற்றதாக்கப்படுகின்றது. மானிடத்திறன் முழுமையற்றுக் காணப்படுகின்றது. சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான முறையில் சரியான வழியில் ஆசிரியர் தமது செயற்பாட்டு நடையை முன்னெடுக்க முடியாதவராகவும் உள்ளார்.

இன்றுவரை ஆக்கமலர்ச்சியைத் தூண்டக்கூடிய அழகியற் பாடங்கள் இயந்திரப் பொறிமுறையாக கற்பிக்கப்படும் செயற்பாடுகளே மேலோங்கியுள்ளன. ஆக்கச் சிந்தனை மேம்பாட்டுக்குத் தடையாக நிலவும் அகப்புறக் காரணிகளை நீக்குவதற்கான திறந்த சிந்தனையும் விரிசிந்தனையும் எம்மிடையே உருவாக்கப்படவில்லை. இவற்றை உருவாக்குவதற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் திட்டமிடப்படவில்லை.


எமது கல்விச் சூழலில் ஆக்கமலர்ச்சிப் பண்பு பன்முக ரீதியில் விரிவாக்கம் பெற வேண்டும். இவை சிந்தனையிலும் நடத்தையிலும் மனப்பாங்கிலும் தனித்துவமும் புதுமையும் வெளிப்படுத்தும் திறனாகவும் விருத்தியடைய வேண்டும். இவை பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும். முன்னரைவிட ஆக்க மலர்ச்சியைத் தூண்டுவதற்கான சமூகத் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் சாதகமாகவே பொருந்தி வருகின்றன. இவற்றை இனங்கண்டு புதிய வழிமுறைகளையும் அனைத்துத் துன்றகளையும் ஊடுருவி நிற்கக்கூடிய வலுவாக்கமாக ஆக்க மலர்ச்சிச் சிந்தனை சமூக எழுச்சியாக மையங்கொள்ள வேண்டும். இதனை முன்னெடுக்கும் வகையில் கலைத் திட்டத்திலும் பரீட்சை நடைமுறைகளிலும் மாற்றங்கள் உருவாக்கப்பட வேண்டும். புதியவற்றைக் கண்டறியும் மாணவர்களின் செயற்பாடுகளுக்கு உற்சாகம் அளிக்கும் விழுமியம் வகுப்பறைச் சூழலில் கருத்தேற்றம் பெற வேண்டும். ஆக்க மலர்ச்சியைத் தூண்டும் கற்றல் வளங்கள் பெருக வேண்டும்.

புதிதாகச் சிந்திப்பதும் செயலாற்றுவதும் சமகாலத்தின் தேவையாகின்றது.

**தெ.மதுசூதனன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.லோகேஸ்வரன்

# இலங்கை கல்வி முறைமையில் தொழில் வழிகாட்டல்



வழிகாட்டல் என்பது 19ம் நூற்றாண்டின் இறுதியிலேயே முதல் முதலாக தொழில் துறைகளில் உருவாகியது. ஐக்கிய அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் பார்சன்ஸ் (Parsons) என்பவரே தொழில் துறையில் வழிகாட்ட ஓர் அமைப்பை ஏற்படுத்தி, வழிகாட்டல் இயக்கத்தை முறைப்படி ஆரம்பித்து வைத்தார். இவரின் இவ் வழிகாட்டல் இயக்கத்தைத் தொடர்ந்து கல்வி நிலையங்களிலும் தனிப்பட்டோர் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இந்த இயக்கம் பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறாக ஆரம்பத்தில் தொழில் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டே வழிகாட்டல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இருந்த போதும் நாளடைவில் தொழில் வழிகாட்டலானது கல்வி வழிகாட்டலுடன் இணைந்தே மேற்கொள்ளப்பட்டது. இன்றும் பாடசாலை மாணவர்களை தொழில் உலகிற்குள் பிரவேசிக்க அவர்களுக்கு வழிகாட்டு வதை ஒரு நோக்கமாகக் கொண்டே இது செயற்படுத்தப்படுகிறது. அதாவது பாடசாலையில் கற்கும் காலத்திலேயே எந்தத் தொழிலை திறம்பட ஆற்றக்கூடிய திறமை தம்மிடமுள்ளது, அதற்கு எவ்வகையான பயிற்சியை பெற்றுக் கொள்ள வேண்டும், அத்தொழில் துறையில் எத்தகைய வாய்ப்புகள் உள்ளன என்பதை மாணவர் தாமே அறிந்து அதற்குத் தம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தொழில் வழிகாட்டலானது செயற்படுத்தப்படுகிறது.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகத் தற்கால சமூகத்தில் பல புதிய தொழில்துறைகள் உருவாகி வருகின்றன. குறிப்பாக ஹோட்டல் உல்லாசப் பயணத்துறை, ஆடை தயாரிப்பு தொழில்நுட்பத்துறை, இலத்திரனியல் தொழில்நுட்பத்துறை, கட்டட நிர்மாணத்துறை, கணினி/கணினி மென்பொருள்துறை என புதிய தொழில்துறைகள் உருவாகி வருகின்றன. அத்துடன் ஒவ்வொரு துறையும் பன்மடங்குகளாக விரிவடைந்தும் செல்கின்றன.

இதில் கணினித் துறையை எடுத்துக்கொண்டால் அது பல பிரிவுகளாகவும் - உபபிரிவுகளாகவும் விரிவடைந்துள்ளன. அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான கற்கைநெறிகளும் பன்மடங்காக அதிகரித்துள்ளன. அத்தொழில்களை செய்ய தனித்திறமையும், தனிப்பயிற்சியும் தேவைப்படுகின்றன. அந்த வகையில் விரிவடைந்து செல்லும் தொழில்துறைகளுள் எந்த தொழிலை தெரிவுசெய்து, எந்த தொழிலுக்கான பயிற்சியினை பாடசாலைக் காலத்திலேயே பெற்றுக்கொள்வது என்பதில் மாணவர்கள் குழப்பமடைகின்றனர்.

எதிர்காலத்தில் தமக்கு விருப்பமில்லாத திறமையில்லாத தொழிலை தெரிவுசெய்து கொள்கின்றனர். விசேடமாக தொழில் தேர்வை பொறுத்தவரை பெற்றோரின் விருப்பங்களே பிள்ளைகள் மீது திணிக்கப்படுகின்றது. தமது பிள்ளைகளின் திறமைகளை அளவுக்கு அதிகமாக மட்டிட்டு அவர்களால் எளிதில் அடைய முடியாத இலக்கை அடைய தூண்டுவதையே அனேகமாகக் காணமுடிகிறது. இவ்வாறு தமக்கு எவ்விதத்திலும் ஆர்வமில்லாத தொழிலை பெற்று இறுதியில் மாணவர்கள் தமது வாழ்க்கையில் தோல்வியடைகின்றனர். இவை மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு எவ்விதத்திலும் பொருத்தமானதல்ல.

இந்நிலையில் மாணவர்களிடம் இளம் பருவத்திலேயே எந்தத் தொழில்துறையில் நாட்டம் இயல்பாகவே காணப்படுகிறது, எந்தத் தொழில் துறையில் திறமை உள்ளது முதலானவற்றைக் கண்டறிய வேண்டும். மேலும் அந்த தொழில்துறையில் பிரவேசிக்க உதவுவதற்கு பாடசாலைக் காலத்திலேயே வழிகாட்டல் என்பது தேவைப்படுகிறது. எனவே இன்று பாடசாலையில் கற்றல் - கற்பித்தல் செயலுடன் இணைந்ததாக ஒரு தொழிலுக்கான சிறப்புப் பயிற்சியினை *(Specialized Training)* வழங்க வேண்டியதும் இன்றியமையாததாக அமைந்துவிட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே உலக நாடுகளில் இன்று பாடசாலைக் கலைத்திட்டத்தில் பல புதிய பாடங்களும், புதிய பயிற்சி நெறிகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

மாணவர் தமது விருப்புக்கும், திறனுக்கும் ஏற்ப எந்தப் பாடத்தை அல்லது பயிற்சியைப் பெற்று தாம் பின்னர் சேரப்போகும் தொழில்துறைக்கு தம்மை தயார்படுத்திக்கொள்ள வழிகாட்டலை அவை வழங்குகின்றன. அத்தோடு இன்று தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகப் புதிய தொழில்கள் மிக வேகமாக தோன்றி வருகின்றன. இதற்கான வேலை வாய்ப்புகளும் உலக ரீதியாக அதிகரித்துச் செல்கின்றன. இத்தகைய புதிய தொழில்துறைகள், வேலை வாய்ப்புகள் பற்றிய அறிவும் பாடசாலைக் காலத்திலேயே மாணவர்களுக்கு வழங்க வேண்டிய தேவையும் தோன்றியுள்ளன. எனவே இன்று பாடசாலையில் ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு மேலாக,

- மாணவர் பற்றி முழுமையாக அறிந்திருத்தல் (ஒவ்வொரு மாணவனதும் தகைமை, திறமை, நாட்டம், ஆளுமைப் பண்புகள் போன்றவற்றை அறிந்து வைத்திருத்தல்)
- எத்தகைய தொழில்களுக்கு சமூகத்தில் தேவைகள் அதிகம் உள்ளது என்பதை அறிந்திருத்தல்.
- குறிப்பிட்ட ஒரு தொழிலை பெற்றுக்கொள்ள தேவைப்படும் தகுதி, முன்பயிற்சி தொடர்பான விபரங்களை அறிந்திருத்தல். (ஒரு தொழிலுக்கு தேவையான கல்வி தகைமை, சிறப்புத் தகைமைகள், வயது, தொழிலின் இயல்பு, கடமைகள் போன்ற விபரங்களைத் தெரிந்திருத்தல்)
- தொழிலின் தன்மைகள் பற்றிய விளக்கம் பெற்றிருத்தல். (குறிப்பிட்ட தொழிலால் கிடைக்கும் பொருளாதார பயன், மனநிறைவு போன்ற விடயங்களைத் தெரிந்திருத்தல்)
- தொழிலைப் பெற்றபின் அத்தொழிலில் முன்னேறுவதற்கு மேற்கொள்ள வேண்டியவை பற்றிய விபரங்களை அறிந்திருத்தல்.

என்பன அவசியமானதாகக் கருதப்படுகின்றது.

இத்தகவல்களை அறிந்திருந்தாலேயே அவர் ஒரு நல்ல வழிகாட்டியாக (தொழில் வழிகாட்டியாக) திகழ முடியும். வளர்ச்சியடைந்த நாடுகளில் 2ம் நிலைக் கல்வி நிலைகளிலேயே கலைத்திட்டத்ினூடாக இவை முறையாக மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக மேலைநாடுகளில் உயர்கல்விக்காக கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்களுக்கு கோடை விடுமுறையில் நடத்தப்படும் இணைப்புப் பாலப் பயிற்சி *(Bridge Course)* இதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். அந்நாடுகளில் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியின்போது தொழில் வழிகாட்டல் தொடர்பிலான பயிற்சியும் அவ்வப்போது வழங்கப்படுகின்றது. ஆனால் எமது நாட்டைப் பொருத்தவரையில் இவை எவ்வளவுதூரம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது விமரிசனத்துக்குரிய ஒன்றாகவே உள்ளது.

### இலங்கைக் கல்வி முறைமையில் தொழில் வழிகாட்டல் சேவை

இலங்கையின் கல்வி வரலாற்றை நோக்கும்போது 1957இல் பாடசாலை அமைப்பில் ஒழுங்குமுறையான வழிகாட்டல் சேவையினை அறிமுகம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டம் 2ம் நிலைக் கல்வியில் *(Secondary Classes)* தொழில் வழிகாட்டலை மையமாகக் கொண்டிருந்தது. இது அமெரிக்க தொழில் வழிகாட்டல் சேவைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டிருந்தது. ஆனாலும் தொழில் வழிகாட்டல் முறையாக பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படாமையினால் 1970களில் முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்தது. தொடர்ந்து 1983களில் கல்வி அமைச்சின் மதிப்பீட்டு, வழிகாட்டல் ஆய்வுப் பிரிவால் ஒரு ஆலோசனை வழிகாட்டல் சேவையை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனாலும் ஆலோசனை வழிகாட்டல் சேவையை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட சிக்கல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக பின்னர் தேசிய இளைஞர் சேவையுடன் இணைந்தே இச்சேவை செயற்படத் தீர்மானிக்கப் பட்டது. இம்முயற்சிகளின் பலனாக இக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட "மவன் மித்திரோ" நிகழ்ச்சி திட்டமே முறையான ஆலோசனை வழங்கல் திட்டமாக செயன் முறைப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இந்த ஆலோசனைச் சேவை திட்டமானது கொழும்பு மாவட்டத்திற் குள் மட்டுப்படுத்தப்பட்டதாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. ஆனாலும் 1994களில் இந்நிகழ்ச்சி திட்டமும் ஸ்தம்பிதம் அடைந்தது.

இதன் பின்னர் இலங்கையில் கல்விக் கொள்கைகளை உருவாக்கும் போது தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்த பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. இருந்தபோதும் அவை முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது எமது நாட்டைப் பொறுத்தவரையில் பிள்ளைகளின் உளசமூக விருத்தியில் கவனம் செலுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களே வழிகாட்டல், ஆலோசனை சேவை நிகழ்ச்சித் திட்டங்களாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணலாம்.

இன்று தேசிய கல்வி நிறுவனமும் அதேபோல் அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் சேவைக்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றன. ஆனாலும் இவ்வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவையில் தொழில் வழிகாட்டல் தொடர்பான ஆலோசனைகள் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படாமை துரதிஷ்டவசமானதாகும். தற்போது பெரும்பாலும் பாடசாலை மட்டத்தில் வழிகாட்டல், ஆலோசனைச் சேவைக்காக ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்களுக்கான விசேட பயிற்சிகளும் வழங்கப்படுவதுடன் வலய மட்டத்திலும் அதற்கான பல்வேறு முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. அவை அனைத்தும் மாணவரின் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முக்கிய இடமளிக்கப்படுவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது.

பொதுவாக வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் ஒரு கூறு தொழில் நோக்கமாக (Vocational Guidance) மாணவருக்கு வழிகாட்டுவதும் ஆகும். மாணவரது விருப்பு, கவர்ச்சி, திறன் என்பவற்றிற்கு ஏற்ப ஒரு தொழில் பிரிவுக்கான பயிற்சியை மேற்கொள்ள அவர்களுக்கு எடுத்துரைப்பதும் இச்சேவையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். ஆனால் எமது பாடசாலைகளை பொறுத்த வரை அதிபர்களோ அல்லது ஆசிரியர்களோ இதற்கான முக்கியத்துவத்தினை பாடசாலை மட்டத்தில் வழங்குவது மிகமிக அரிதாகவே உள்ளது. இதற்கான அடிப்படை காரணங்களாவன:

- எமது கல்வி முறைமையுள் தொழில் வழிகாட்டல் சேவைக்கான முறையான வேலைத்திட்டம் இல்லாமை (அமைச்சு மட்டத்தில், வலய மட்டத்தில், பாடசாலை மட்டத்தில் வேலைத்திட்டங்கள் இல்லாமை)



- பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் தொழில் வழிகாட்டலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமை.
- அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் தொழில் வழிகாட்டல் சேவையை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபாடு குறைவாக உள்ளமை.
- பாடசாலையில் தொழில் வழிகாட்டல் சேவைக்காக நேரத்தை முறையாக ஒதுக்கி கொள்ளாமை. (கலைத் திட்டத்தில் பாடங்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமை)
- ஆசிரியரின் மனப்பாங்கு தொழில் வழிகாட்டலுக்கு தடையாக இருக்கின்றமை. (தமது பாடத்தை கற்பிப்பதில் மட்டுமே அதிக கவனம் செலுத்துதல்)
- அதிபர்களிடமும், ஆசிரியர்களிடமும் அதற்கான விழிப்புணர்வு இல்லாமை.
- தொழில் வழிகாட்டல் பயிற்சியை பெற்ற ஆசிரியர்கள் அல்லது ஆலோசகர்கள் பாடசாலை மட்டத்தில் இல்லாமை. (தொழில் வழிகாட்டலில் நிபுணத்துவம் உடையவர்கள் இல்லாமை) போன்றவற்றை விசேடமாக நாம் இங்கு சுட்டிக்காட்டலாம்.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை கருத்தில் கொண்டு பாடசாலை மட்டத்தில் (அதிபர், ஆசிரியர்கள் ஊடாக) தொழில் வழிகாட்டல் அல்லது ஆலோசனைக் கூறல் சேவையினை வருடாந்த வேலைத்திட்டத்தின் ஊடாகவே நிறைவேற்றிக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில்,

- காலைக் கூட்டத்தில் தொழில் வழிகாட்டல் தொடர்பில் கருத்துரை வழங்குதல். (வாரத்தில் ஒரு முறையேனும்)
- பாடசாலை அறிவித்தல் பலகையை தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துதல். (நவீன தொழில் துறை தொடர்பான தகவல்கள், தொழில் விண்ணப்பங்கள் என்பவற்றை காட்சிப்படுத்துதல்)
- ஆசிரியர்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலையில் தொழில் வழிகாட்டல் தொடர்பிலான செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல். (தொழில் வழிகாட்டல் சேவையில் நிபுணத்துவம் பெற்றோரின் உதவியுடன்)
- சேவை மூப்புடைய ஆசிரியர்களை இணைத்து தொழில் வழிகாட்டல் சேவையினைப் பாடசாலை மட்டத்தில் செயற்படுத்துதல்.
- 2ம் நிலை வகுப்புகளிலும், உயர் வகுப்புகளிலும் பாட தெரிவின் போது தொழில்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுதல்.
- பெற்றோருடனும் இன்றைய நவீன தொழில்துறைகள் தொடர்பில் கலந்துரையாடுதல். (2ம் நிலை வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் பெற்றோருடன் - பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டங்களில் விசேடமாக இது தொடர்பாகக் கலந்துரையாடுதல்)
- தொழில்கள் தொடர்பிலான புதிய தகவல்களை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தல். (தொழில் வாய்ப்புக்கள் பற்றியும், அதற்குத் தேவைப்படும் பயிற்சிகள் பற்றியும் - நூல்களில் இருந்தும், இணையதள வெளியீடுகளில் இருந்தும் பெற்றுக்கொடுத்தல் அல்லது பெற வழிசெய்தல்)
- தொழில் வழிகாட்டல் சேவையினை வழங்கும் தனியார் நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொடுத்தல். (தேசிய இளைஞர் மன்றம்/ அரச சார்பற்ற நிறுவனங்கள் NGO's)
- ஆசிரியர்களிடம் இதற்கு எதிரான மனப்பான்மைகள் இருப்பின் அதனைப் போக்குதல்.
- வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது ஒப்படைகள், செயற்றிட்டங்கள் என்பவற்றை வழங்குதல். (மாணவர் விரும்பும் தொழில்/ கடமை/ பொறுப்பு/ வேதனம் போன்றவற்றை அறிந்துகொள்ளும் வகையில்)
- உயர் வகுப்புக்கு சித்தியடைய தவறுவோருக்கு அல்லது பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்படாதோருக்கு பொருத்தமான வழிகாட்டலை வழங்குதல். (தொழிலை பெறும் நோக்கில் தொடர்ந்து கற்பதற்கு வழிப்படுத்துதல் - தொழில் பயிற்சி கல்லூரி/ தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு)

மேற்குறித்த அம்சங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக மேற்கத்தேய நாடுகளைப் போன்று தொழில் வழிகாட்டல் சேவையினை பாடசாலைக்குள்ளேயே தனிப்பிரிவாக, அதற்கே ஆளணியுடன், போதுமான நேரத்தைச் செலவிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி முடியாது போனாலும் பாடசாலைகளில் மேற்கூறிய சில நடைமுறைகள் ஊடாக இதனை ஓரளவேனும் சாத்தியமாக்கிக் கொள்ளலாம். இதன் வெற்றியானது முழுமையாக அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கைகளிலேயே தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**முடிவுரை**

கல்வியின் பிரதான நோக்கங்களில் ஒன்று நல்ல ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்ள பிள்ளைகளை ஆயத்தப் படுத்துவதாகும். ஆனால் இது இன்று பாடசாலைகளில் நடைமுறைப்படும் கலைத்திட்டத்தை பொறுத்தவரை எவ்வளவு தூரம் சாத்தியமாகின்றது என்பது கேள்விக் குரியதொன்றாகும். பாடசாலைக் கல்வி நிறைவடைந்ததும் பிறரின் அனுசரணையில் வாழாமல் தனது கைகளையே நம்பி ஒரு தொழிலைச் செய்து வாழ்க்கை நடத்த தேவையான அறிவையும், திறனையும் பாடசாலைக் காலத்திலேயே மாணவர் பெற்றுக்கொள்ள வேண்டும். இது பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.


இன்றைய தொழில்நுட்ப துறையின் துரித வளர்ச்சியின் காரணமாக பல புதிய வேலைவாய்ப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனவே இவற்றுக்கு இசைவாக மாணவர்கள் வழிப்படுத்தப்பட்டு அவற்றுக்கான பயிற்சியும் பாடசாலைக் காலத்திலேயே வழங்கப்படல் வேண்டும். அது மாத்திரமன்றி பாடசாலையைவிட்டு மாணவர் வெளியேறும் போது அவர்கள் தொழில் ஒன்றுக்காக முறையாக நெறிப்படுத்தப்படவும் வேண்டும். தான் எத்தொழிலை எதிர்காலத்தில் தேர்ந்தெடுப்பது அதற்கான பயிற்சியை எவ்வாறு பெற்றுக்கொள்வது போன்றவை தொடர்பிலான வழிகாட்டல்/ ஆலோசனை முறையாக வழங்கப்படவும் வேண்டும்.

மேற்கத்தேய சமூக அமைப்பில் தொழில் வழிகாட்டல்/ ஆலோசனை வழங்குதல் என்பது இன்று கல்வி அமைப்பில் இன்றியமையாத ஒரு துறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முக்கியமாக 2ம் நிலை, மேல் நிலை வகுப்புகளில் தொழில் தேர்வு வழிகாட்டுதலுக்கு ஏற்ப தொழிலை தெரிவுசெய்து அதில் வெற்றியும், மன நிறைவும் பெற்று வாழ வழிப்படுத்துதல் என்பது பாடசாலைகளில் முக்கிய பணியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் எமது நாட்டு கல்வி முறைமையில் இவ்வாறான தொழில் தேர்வுக்கு வழிகாட்டுதல் செயன்முறை பாடசாலை கலைத்திட்டத்தில் போதிய முக்கியத்துவம் வழங்கப்படாமல் இருப்பது துரதிஷ்டவசமானதாகும். தனியார் கல்வி நிலையங்களில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள போதும் அரச பாடசாலைகளில் இதற்கான எந்த நடைமுறையும் செயல்வடிவம் பெறாமல் இருப்பது மாணவரின் எதிர்கால வாழ்வையே பாதிக்கச் செய்யும் நிலையாகவே அமைகின்றது.

எனவே பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் தாமும் இந்த வேலையில்லா படையுடன் இணைந்து காலத்தை வீணடிப்பதைவிட தொழில் சந்தையில் கிடைக்கக்கூடிய வேலை உலகுக்கு தக்கவாறு தம்மைத் தயார்படுத்த வேண்டும். அத்துடன் தமது தகைமைகள், ஆற்றல்கள் என்பவற்றுக்கு ஏற்ப தொழில் ஒன்றை பெற்று மனநிறைவுடன் வாழ பாடசாலைகளில் ***தொழில் வழிகாட்டல்/ ஆலோசனை கூறல் சேவை*** இன்றியமையாததாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெ.பேரின்பராசா

# மெல்லக் கற்கும் மாணவர்களும் கற்பித்தலியலும்

**சோக்கிரட்டிசின் அறிவுவாத இயங்கியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு**


ஆதி கிரேக்க காலத்தில் பிரபஞ்சக் காரணமாய், மெய்மை, அறிவு ஆகியவற்றை மையமாகக் கொண்டு மெய்யியல் சிந்தனைகள் வளர்ச்சியடைந்தன. ஆதிக் கிரேக்கர்களில் சோபிஸ்ட் என்னும் சிந்தனையாளர்கள் உருவாகினர். இயற்கை பற்றி இருந்த மையக் கோட்பாட்டை மானுடச் சார்பாக மாற்றிய பெருமை சோபிஸ்ட்டுக்களைச் சேரும். மனிதனே யாவற்றிற்கும் அளவுகோல் என்னும் கருத்து நிலைபெற்றது. சோபிஸ்ட்டுக்களின் மனித மையவாதம் மனிதனது பலத்தையும் அதேநேரம் பலவீனத்தையும் வெளிப்படுத்தும் போக்குக்கு வழிகாட்டியது.

சோபிஸ்ட்டுக்களில் முதன்மையானவர் ஆரம்பகால கிரேக்க அறிஞர்களில் ஒருவரான புரோட்டகோரஸ் ஆவார். மனிதனே அனைத்துக்குமான அளவுகோல் என்னும் கருத்துக்களை முன்வைத்ததன் மூலம் மனிதன் அறிவுடையவன் என்பதையும் மனித அறிவே மேலானது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் சோக்கிரட்டீசோ இக்கருத்துக்களை மறுத்து விமரிசனம் செய்யும் ஒருவராக விளங்கினார். மனிதன் மறதி, விருப்பு வெறுப்பு, சார்புத்தன்மை, சூழல்தாக்கம், உடல் பலவீனம் என்பவற்றிற்கு உட்படுவதால் மனிதனை முழுநிலையில் நோக்கலாமா? என்னும் வினாவை உருவாக்கினார்.

இதற்கமையவே தமது போதனை முறை, அறிவின் இயக்கம் பற்றி தமது சீடர்களுடன் உரையாடினார். அவரது உரையாடல் முறையே அறிவின் இயங்கியலாக வலியுறுத்தப்படுகின்றது.

சோக்கிரட்டீஸ் நூல் எதனையும் எழுதவில்லை. தனது சீடரான பிளேட்டோவுக்கும் அவருக்கும் இடையிலான உரையாடல்களே பின்பு குடியரசு, சட்டம், என்னும் நூல்களாக பிளேட்டோவால் எழுதப்பட்டது.

அறிவு வேட்கை என்பது சாதாரண விளக்கங்களால் நிறைவு செய்யப்பட முடியாததாகும். பிளேட்டோவின் நூல்களிலே காணப்படும் மெனோ(Meno) உரையாடலில் அறிவு வேட்கையும், அறிவைக் கொடுக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை பற்றியும் எடுத்துரைக்கப்படு கிறது. சோக்கிரட்டீஸ் கேத்திர கணி தத்தில் பயிற்சியில்லாத ஒரு மாண வருக்கு கேத்திர கணிதத்தை கற்பிக்க முயல்கிறார். வினாக்கேட்டும் முறையை பின்பற்றியே கற்பிக்க முயல்கிறார். கற்பிக்கும் போது தோன்ற க்கூடிய சிக்கல்களுக்கு தீர்வுகாண கணிதத்தை நிறுவுவதைவிட்டு வினாக் கள் மூலம் வடிவ இயல் தொடர்பு களை உணருமாறு தீட்டங்களை கேட் கிறார். அறிந்துகொள்ள வேண்டிய கருத்தை வலுப்படுத்தும் ஓர்முறை இதுவாகும். இதில் வினாக் கேட்ட லின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படு கிறது.



இந்த உரையாடல் முறையே பிளாட்டோ தனது மெய்யியல் கோட் பாட்டுக்கு பயன்படுத்துகிறார். அக நிலை அறிவுத்தூண்டலாக சோக்கி ரட்டீஸின் அறிவு இயங்கியல் அமைகிறது. அத்துடன் பிளேட்டோ அனுபவ வழி அறிவை விட இம்முறைமை வேறுபட்டது என்றும் தனது குருவாகிய சோக்கிரட்டீ ஸின் கொள்கையை எடுத்துக்காட்டுகிறார்.

சமகாலத்திலே எந்தவொரு கற்பித்தல் முறையிலும் வினாக்கேட்டல் முறை முக்கியமானதாகும். நிலை மாற்று வகிபாகத்தை ஆசிரியர் பின்பற்றும்போது வினாக்கேட்டல் முறையியல் முக்கியத்துவம் பெற்று விடுகிறது. தற்காலத்தில் இடம்பெறும் கட்டுருவாக்க கற்பித்தல் முறையிலும் முதற்படியாக அமைவது வினாக் கேட்டல் படிமுறை ஆகும். 5E ன் அடங்கும் Engagement என்னும் முதல்படி வினாக்கேட்டல் நுட்பத்தையே சுட்டிக் காட்டுகின்றது. ஓர் ஆசிரியர் தாம் அறிந்ததை மாண வருக்கு வழங்குவதற்கான எளிய மார்க்கமாக வினாக் முறையியல் அமைந்து விடுகின்றது. 5E முறையில் இடம் பெறும் வினாக்கேட்டல் முறைமை பல்வேறு நுட்பங் களையும் நல்ல அனுகூலங்களையும் வெளிப்படுத்து கிறது.

5E முறையினால், கற்போரது பிரச்சினைகள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்படும். கற்றலுக்கான ஒரு பரிசோதனை ஆய்வாக இது பயன்படுகிறது. வினாக் கள் வினவும் முறையே பரிசோதனைக்கான மாதிரி யாக பயன்படுத்தப்படுகிறது. மாணவர்கள் வினாக்கள் மூலமாக மட்டுமே ஊக்குவிக்கப்படுகின்றனர். மாணவர் கற்றலை தொடர்ச்சியாக மீளாய்வுக்குட்படுத்த இந்த முறை உதவும். கோட்பாடுகளை பிரயோகிக்கும் கற்றல் முறையாக இது கட்டமைக்கப்படும். மாணவர் நிலைய றிந்து கற்பித்தலுக்கான திட்டமிடலை ஆசிரியர் மேற் கொள்ள இக்கொள்கை உதவும். வினாக்கேட்டல் முறை மாணவ மைய கற்றலாக அமையும். பிழையாக விளக்கம் பெற்றிருந்தால் அதனை திருத்தும் வாய்ப்பு ஏற்படும். தமக்கு மறுபக்கம் உள்ள கற்போரை பேச வைக்கும் உத்தியாகவும் அமையும்.

வினாக்கேட்டலின் முறைமையை சோக்கிரட்டீஸ் கையாளும்போது நானும் மாணவனும் ஒரே அறிவுத் தளத்தில் இருக்கின்றோம் என்னும் உணர்வுக்கு உட்படு கிறார். இது ஆசிரியர் ஒருவருக்கு பொருந்தக்கூடிய கொள்கையாக அமைகிறது. அத்துடன் மெல்லக்கற்கும் மாணவருக்கு கற்பிக்கும் ஒரு மார்க்கமாகவும் கருதப்பட் டப்படும்.

மாணவர்களுடன் சோக்கிரட்டீஸ் உரையாடும் உரையாடலை தொகுத்த பிளேட்டோ உரையாடல் ஆரம்பமாகும் போது, "எனக்கொன்றும் தெரியாது" எனக் கூறி உரையாடலை ஆரம்பித்தார் என்று கூறியுள் ளார். தான் வாழ்ந்த தெருக்களில் வசித்த சாதாரண மனிதர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு ஞானம், அறிவு, நன்மை பற்றி போதனை செய்தார். ஒருவர் சுயமாகவோ, அகவய உணர்தல் மூலமோ, தெய்வீக அருள் மூலமோ அறிவைப்பெற்றதாக சோக்கிரட்டீஸ் கூறவில்லை. உரையாடலை தூண்டுதல், அதற்கான நுட்பங்களைக் கையாளுதல், முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுதல், மாற்றுத் தகவல்களை முன்வைத்தல் என்பன உரையாடல்களின் போது இடம்பெறும். அதுவே அறிவின் மூலமாகவும் செயற்பாடாகவும் அமையும் என சோக்கிரட்டீஸ் கருதி இருந்தார். உரையாடல் முறையில் இருவர் ஈடுபடும் போது கற்றல் - கற்பித்தல் ஒருவகை கூட்டு முயற்சியாக இடம்பெறுதலை நோக்க முடிகிறது.

உரையாடலில் ஈடுபடுவதும் அறிவின் இயங்கியல் முறைமை உருவாக்கப்படுவதும் ஒரு மருத்துவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதியின் கடமைகளுக்கு ஒப்பானது என சோக்கிரட்டிஸ் கருதினார். கற்பித்தல் என்பது அறிவை பிறர் மீது திணிப்பது அல்ல. ஆனால் அறிவையும் ஞானத்தையும் அவர்களாகவே பெற்றுக்கொள்வதற்கு உதவும் ஒரு செயற்பாடாக அறிவு முறையியல் முன்வைக்கப்படுகிறது. இதனாலேயே போதனையாளரை மருத்துவ தாதிக்கு ஒப்பிட்டுள்ளார்.

பொதுவாகவே மெல்லக் கற்பவர்களுக்கு அனுபவ வழிக்கல்வி, செயல்வழிகல்வி முறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் என்னும் கொள்கை நிலவும் சூழலிலே சோக்கிரட்டிஸின் அறிவுவாத இயங்கியல் வேறுபட்ட சிந்தனையை முன்வைக்கிறது. அறிவு என்பது பகுத்தறிவுடன் தொடர்புடையது என்பது அவரது கருத்து. பகுத்தறிவு உண்டு என்பதையும் அது எவ்வாறு செயற்படுகிறது என்பதையும் அறிவின் இயங்கியல் நிலையே வெளிப்படுத்தும் என்று சோக்கிரட்டிஸ் சுட்டிக்காட்டினார். மனிதன் புலனுணர்வு என்னும் ஊடகத்தினால் அறிதலை உணர்கிறார் என்பது சோக்கிரட்டிசின் சிந்தனைகளால் முன்வைக்கப்படுகிறது.

சாதாரண கற்பித்தல் முறைகளின்போது புலக்காட்சி செயன்முறைகளாலே அறிவின் இயக்கம் ஏற்படலாம் எனக் கூறப்படும் வேளையில், சோக்கிரட்டிஸ் புலனுணர்வு செயற்பாட்டின் மூலமே உண்மை அறிவின் இயக்கம் உருவாகும் என நம்பினார். கற்றலிலும் கற்பித்தலிலும் புலக்காட்சி தொடர்பாக கற்றல், புலனுணர்வு சார்பான கற்றல் ஆகிய இரண்டும் பிரதானமானவை. புலக்காட்சி சார்ந்தவை, புலக்காட்சி சாராதவை என இவற்றைக் குறிப்பிடலாம். இவ்வேளையில் புலக்காட்சி சார் கற்றல் கொள்கையினர் ஒழுங்கமைக்கப்பட்ட கற்றல் சாதனங்களினாலேயே அறிவுத் தொகுதியை பெற்றுக்கொள்வர். ஆனால் புலக்காட்சி சாராது அறிவின் செயற்பாட்டை உணர்பவர்கள் புலக்காட்சி சார்ந்த தரப்பினரை விட சிறப்பாகக் கற்ககூடிய வாய்ப்பு உண்டாகும். சோக்கிரட்டீஸ் புலக்காட்சி சாராத அறிவுச் செயற்பாட்டினையே முன்வைக்கிறார்.

மெல்லக்கற்போரினது நிலை பல்வேறு வெளிப்பாடுகளில் காணப்படும். குறித்த மாணவர் தொகுதியில் 0.5% மானோர் மெல்லக்கற்கும் தன்மையுடையோராவர். அவர்களது இயல்புகளில் பொருத்தமான துலங்கலை வெளிப்படுத்தாத தன்மை காணப்படும். பேச்சுக்குறைபாடு, எழுத்துக்குறைபாடு மெல்லக்கற்போரில் ஆதிக்கம் செலுத்தும். இன்னொருபுறம் ஞாபகசக்திக் குறைபாடு காணப்படும். இதனால் உளநல பாதிப்புக்கும் உட்படலாம். முன்னைய பாட அலகுகளை முழுமையாகப் பூர்த்தி செய்யமுடியாத தன்மை மெல்லக்கற்கும் நிலையை ஏற்படுத்தி இருக்கும். கற்றலில் போதியளவு ஆர்வமின்மையும் இந்நிலைக்கு காரணமாகலாம் . கிரகித்தல், விளக்கம் பெறுதல் முதலியவற்றில் குறைபாடு உடையோராக மெல்லக்கற்போர் விளங்குவர்.

இந்நிலையில் மெல்லக்கற்போர் மாணவர் நிலை தொடர்பில் நாம் முன்னெடுக்க வேண்டிய உத்திகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- மெல்லக்கற்போர் தொடர்பான குறைபாட்டை பிறர் மத்தியில் கூறக்கூடாது
- நேர்முகம் மீள்வலியுறுத்தல் அவசியம்
- கற்பிக்கும் பாடத்தின் அவசியத்தையும் அதன் நோக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்
- சிறுசிறு கூறுகளாக பிரித்து நுண்பாக கற்பித்தல் முறையை விருத்தி செய்தல் வேண்டும்
- பொருத்தமான வழிநடத்தல், பொருத்தமான பின்னூட்டல் அவசியமானவை
- சுயகற்றலுக்கு ஊக்கல் தொடர்பான புலனுணர்வை மாணவர்களுக்குத் தூண்டுதல் வேண்டும்
- கலந்துரையாடல் எளிமையான படிமுறையாக பின்பற்றப்படல்
- சிந்தனைக்கிளறல் கற்பித்தல் முறையில் இது தொடர்புபடும்

மெல்லக்கற்போரை ஊக்குவித்தலில் பலவகை ஊக்குவித்தல் பாங்குகளை நோக்கலாம். வாய்மொழிமூல ஊக்குவித்தல், வெகுமதிகளினூடான ஊக்குவித்தல், வினாடி வினாப் போட்டிகளால் ஊக்குவித்தல், குறித்த நோக்கத்தைக் கொண்ட செயற்பாடுகளால் ஊக்குவித்தல், தம்மை தாமே சுதந்திரமாக ஊக்குவித்தல் ஆகிய முறைகளில் இது முன்வைக்கப்படுகிறது. இத்தகைய ஊக்குவித்தல்கள் சோக்கிரட்டிசின் அறிவு இயங்கியல் முறைமைகளுடன் தொடர்புபட்டவையாகும்.

வினாவிடைக் கற்பித்தல் முறைகள், கலந்துரையாடல் கற்பித்தல் முறைகள், விரிவுரைமுறைகள், உடனடி உரையாடல்கள், விசாரணை முறையிலான கற்பித்தலியல் செயற்பாடாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. புலக்காட்சி சாரா முறையிலான வினாக் கோட்டல் உத்தியும் சோக்கிரட்டிசின் சிந்தனைகளில் இருந்து வளர்ச்சியடைந்த மற்றுமொரு நுட்பமாகும்.

கற்றல்-கற்பித்தல் தொடர்பாடல்களில் 3T செயற்பாடுகள் பற்றி தற்போது சிறப்பாகப் பேசப்படு கிறது. அவற்றில்:




F *Transmission* :- ஒருவழிக்கற்றல் ஆசிரியர் மட்டும் பேசுதல் என்பதாக அமைகிறது.

F *Transaction* :- இருவழிக்கற்றல் ஆசிரியரும் - மாணவரும் பேசுதல் என்பதாக அமைகிறது

F *Transformation* :- இது நிலைமாற்று வகிபாக கற்றல் முறைமையாகும். மூன்று வழிக்கற்றல் நிலை யைக் குறிப்பிடும். ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் இடம்பெறும் கலந்துரையாடல் மட்டுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் நடைபெறும் கலந்துரையாடலுடன் இது தொடர்பு படுகிறது.

உரையாடலும் விசாரணை முறையும் இந்தக் கற்பித்தல் செயற்பாடுகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ் உரையாடல் மூலமாக அறிவைக் கட்டியெழுப்புதல் சோக்கிரட்டீஸ் வாழ்ந்த காலம் முதல் செல்வாக்குப் பெற்றுள்ளதை நோக்க முடிகிறது. கட்டுருவாக்க கற்பித்தல் முறையிலும், ஆசிரியர்களின் நினைவாற்றும் வகிபாகத்தின்போதும் வினாக்கேட்டல் முறை தொடர்ந்து செல்கிறது.


புலக்காட்சிச் செயன்முறைகளின் போதும் வினாக் கேட்டலும் உரையாடலும் உள்நுழைந்து செல்வாக்கு பெற்று வருவதைக் காணமுடிகிறது. கலந்துரையாடலை தளமாகக் கொண்ட கற்பித்தல் தத்துவம் கிரேக்க மெய்யியலாளர்களில் மட்டுமன்றி கீழைத்தேய கற்பித்தல் முறைகளிலும் பின்னிப்பிணைந்துள்ளமையையும் உணரலாம். இந்து பௌத்த மதத்தில் இதன் செல்வாக்கு காணப்படுகிறது. தகவல்களை கட்டியெழுப்பும் ஒருவகைக் கற்றல்- கற்பித்தல் பாங்காக இக்கொள்கை முன்வைக்கப்படுகிறது.

இதனால் மெல்லக்கற்கும் மாணவர்கள் தங்களது சுய அறிவு விளக்க தளத்தில் இருந்து புதிய அறிவை கட்டியெழுப்ப முடிகிறது. புதிய அறிவின் தெறிப்பாக இது உணரப்படுகிறது. வினாக்கள் மூலமான கற்றல் கற்பித்தல் பாங்கு மெல்லக்கற்போரிடையே ஒரு புதிய விளைவாக உருவெடுக்கின்றது. இந்துமத மரபில் விவாத முறையிலான கற்பித்தலியல் தனியான ஆய்வுப்பரப்பாக விரிவடையலாம்.

உரையாடல், விவாதம், விசாரிப்பு முறையிலான கற்றலானது ஆய்வு வகைக் கற்றல் முறைகளுடன் தொடர்புடையதாகும். வினாக்கேட்டல் முறையான ஒருவகை அணுகுமுறையாக அமைகிறது. திறந்த வினாக்கள், பாடத்திற்கு பொருத்தமான வினாக்கள், சரியான விடைக்குரிய வினாக்கள், தாமாகவே மாணவர்கள் விடைகளை கண்டறியும் வினாக்கள், தெரிந்ததில் இருந்து தெரியாததை நோக்கிச் செல்லும் வினாக்களாக அமைதல், வினாக்களினூடாக ஆழ்ந்த சிந்தனையை ஏற்படுத்தல், மாணவரிடம் இருந்து உருவாகும் வினாக்களுக்கு கவனம் செலுத்தல், மாணவர் வினாக்கள் தவறாக இருக்கும் பட்சத்தில் போதிய பின்னூட்டல் வழங்கல் என்பன பிரதானமானவை. இறுதியாக மாணவர்களைப் பொருத்தமான மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் போதும் இவ்வினாக்கேட்டல் முறையை பின்பற்ற முடியும். வினாக்கேட்டலின் போது அறுவகை வினாக்கள் வெளிப்படுத்தும் வினாக்கள் இடைமாற்று வினாக்கள் கருதுகோள் வினாக்கள் என வினாக்களின் வடிவங்கள் பல்வேறு வகையில் அமைந்திருப்பதனைக் குறிப்பிடலாம். இவை அனைத்தும் புலனுணர்வான அறிவை தூண்டி மாணவர் கற்றலுக்கு மேலும் ஊக்கியாக அமையும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு.பரமானந்தம்

# புதிய நோக்கில் விளைதிறன்மிக்க கற்றல் நுட்பங்கள்

பாடவிதானம் என்பது ஒரு பாடசாலையில் செயற்படுத்தப்படும் சகல கற்றல் அனுபவங்களும் என்ற கருதப்படுவதுடன் அதனை ஒழுங்குபடுத்தும் நிறுவனம் பாடசாலை என்றும் நடைமுறையில் உள்ளது. பாடவிதானம் என்னும் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டே கல்விநிலையமொன்றின் அடிப்படை கட்டியெழுப்பப்படுகின்றது. கற்றல் செயன்முறை என்பது பெரும்பாலும் வகுப்பறையில் அல்லது பாடசாலைக்குள் அல்லது வெளியில் கற்போரின் ஆர்வமிக்க பங்குபற்றுதலோடு ஆசிரியரின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ கற்பவர் முன்னர் பெற்றிராத அறிவு, திறன், மனப்பாங்கு அல்லது பெறுமானம் (ஒன்றோ, பலவோ அல்லது எல்லாமோ) புதியனவற்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவும் அனுபவம் தொடர்பான செயன்முறையாகும். இதை அடிப்படையாக அமைவது கல்வி கற்பவரது ஈடுபாடும் பங்குபற்றுதலுமாகும்.



விளைதிறனுள்ள கற்றல் கற்பித்தலுக்கான முறையியல்களையும் நுட்பங்களையும் விருத்திசெய்வதில் அழுத்தம் கொடுப்பதில் பேயரின் அணுகுமுறை முன்னிலை வகிக்கின்றது. கல்விநோக்கங்களை விளைத்திறன் உள்ள வகையில் உண்மையாக்குவதற்கு வேண்டிய கற்றல் சூழலை ஒழுங்கமைப்பதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கும், கற்றல் விளைவுகளை அளவிடுவதற்கும் வடிவமைப்பதற்கும் வேண்டிய வழிமுறைகளைத் தருகின்றது. கற்றல் சூழலமைவில் சாதனங்களின் தெரிவு முறைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி கற்றலுக்கு உள்ளீடு, வெளியீடு, செயற்கிரமத்தின் உருவாக்கம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஹிலாட் ஜேசன் (Hillard Jason) என்பவர் தகவல்களை வழங்குதல், பங்கேற்கும் முறைகளைக் கைக்கொள்ளல், குறித்த திறன்களின் பயிற்சிக்கு உதவுதல், பின்னூட்டல் வழங்குவதில் பங்களிப்புச்செய்தல் போன்ற செயற்கிரமங்களில் கற்பிப்பவரின் பங்களிப்பை வலியுறுத்துகின்றார்.

மாணவரது நடத்தை மாற்றங்களின் அல்லது மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் வகுப்பறைக் கற்பித்தலின் விளைத்திறனை மதிப்பிடுதல் போன்ற செயற்கிரமங்கள் கற்பவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிப்பவர்களுக்கு இடையிலான வினையாற்றலை அதிகரிக்கச் செய்ய பல்வேறு அணுகுமுறைகள் முன் வைக்கப்படுகின்றது.

- அதிக மாணவர்களால் அடையப்படக்கூடியதான தேவையைக் கொண்டதும் கற்றல் சாதனங்களின் வீச்சை அதிகரித்துக் கொள்வதற்கும் அவர்களால் இயலக்கூடியதாய் இருத்தல்.
- சுதந்திரமான கற்றலுக்கான சிறந்த வாய்ப்பினை விரும்புதல். ஆகக் குறைந்த வரையறுக்கப்பட்ட மாணவர்களின் துலங்கல்களையாவது அனு மதித்தல்.
- மாணவர்களது கல்வித் தேவையையும் பண்புகளை யும் அடையாளம் காண்பதும் ஆய்வுசெய்தலும்.
- குறிப்பான வகுப்பறை நோக்கங்களை வரையறுத்த லும் நடத்தை வடிவில் அவற்றை விதந்துரைத்தலும்.
- பொருத்தமான தொடரொழுங்கில் அறிவுறுத்தலுக் கான உள்ளடக்கங்களை பகுத்தாராய்தலும் ஒழுங்கமைத்தலும்.
- கிடைக்கக்கூடிய கற்றல் - கற்பித்தல் வளங்களை யும் சாதனங்களையும் அடையாளங் காணல்.
- உபதொகுதிகளான மாணவர்கள், ஆசிரியர்கள், கற்றல் - கற்பித்தல் சாதனம், அறிவுறுத்தலின் உள்ளடக்கம், முறையியல் என்பவற்றுக்கிடை யிலான இடைவினைத் தொடர்பின் போக்கினை அடையாளம் காணல்.

கற்பவரிடம் எதிர்பார்க்கும் அறிவு, திறன், மனப் பாங்கு, தேர்ச்சி , விழுமியம் என்பவற்றை அடிப்படை யாகக் கொண்ட நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த வேண் டும். இந்த நோக்கத்துடன் ஒழுங்குபடுத்திய கற்றல் அனுபவங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான மானிட, பௌதிக, அடிப்படை வளங்களையும் காலத் தையும் (நேரம்) முறையாக ஒழுங்குற அமைந்த திட்டத் தின்படி உச்சப் பயன்பெறும் முறையில் செயற்படுத்த லும் அவற்றைப் பயன்படுத்துதலும் ஆகும். இப்பயன் படுத்தலின்போது குறித்த நோக்கங்கள் அடையப்பட்ட தாவென அறிய மதிப்பீடு செய்தலும் அச்செயன் முறையை தொடர்ச்சியாகச் செயற்படுத்துவதும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைக்கான செயற்கிரமங்களாகக் கருதப்படுகின்றது.

***அதில் இரு அடிப்படைகள் கருத்தில் கொள்ளப் படுகின்றது.***

(1) விளைதிறன் பயன்தருதன்மை : கல்விச்செயன் முறை மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை உச்ச அளவில் நிறைவேற்றிக்கொள்ளுவதன் ஊடாக விளைதிறனை உச்சமட்டத்திற்குக் கொண்டுவருதல்.

(2) வினைத்திறன் பயன்படுதன்மை: கல்விச்செயன் முறை மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறை வேற்றிக்கொள்ளுதல். இதற்காக **உள்ளிடும் வளங்களை** உயரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் அவற்றிலிருந்து உச்சப் பயனைப் பெறுதல்.

ஒரு விளைதிறனுள்ள ஆசிரியர் மெல்லக்கற்கும் மாணவர் விடயத்தில் பல்வேறு நுட்பங்களைப் பயன் படுத்தி கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண் டிய தேவையுள்ளது. ஒவ்வொரு மாணவரினதும் கற்றல் பாங்கும், புலக்காட்சியும், அனுபவமாக்கல் பாங்கும் தனித்துவமானதென்பதை சரியாக இனங்காண்பதே ஆசிரியரது பிரதான கடமையாகின்றது. விளைதிறன் மிக்க கற்றல் சூழமைவை உருவாக்கும் போது மாணவர் களிடத்தில் காணப்படும் ஒத்த தன்மைகளையும், தனித்துவங்களையும் இனங்காணுதல் அவசியமாகின்றது.

### 1. விளைதிறனுள்ள கற்போரை உருவாக்குதலில் படிமுறைகள்:

கல்வியியலாளர்களின் தத்துவார்த்த மற்றும் ஆய்வுச் சிந்தனைகளால் பெறப்பட்ட கல்வித் தத்துவங்கள் இன்று ஆசிரியர் மையக் கல்வி முறையிலிருந்து மாணவர் மைய முறைமைக்கு கற்றலை இட்டுச் செல்கின்றது. அதாவது கற்றலுக்கு கற்போர் பொறுப்பாக இருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. எனினும் விளைதிறனுள்ள கற்போரை உருவாக்கும் பொறுப்பு ஒரு ஆசிரியரின் கைகளிலேயே தங்கியுள்ளது. இது தொடர்பாக பல்வேறு அறிஞர்களால் விதந்துரைக்கப்பட்ட அணுகுமுறைகள் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

### 2. விளைதிறனுள்ள கற்போரை உருவாக்குதலில் மாணவருக்கு உதவுதல் - மாதிரி 1

- குறிக்கப்பட்ட கற்றல் திறனின் மீது அவதானத்தை குவியப்படுத்துதல். (தகவல்களை இலக்கு நோக்கி ஒழுங்குபடுத்தல்)
- குறிக்கப்பட்ட திறனை மாதிரியாகக் கொண்டு *(Model)* செயற்படல். (இலக்குநோக்கிய செயற் பாடும் தீர்மானங்களின் வெளிப்பாடும்)
- சிறந்த அனுபவத்தையும் தெளிவான இலக்கையும் வெளிக்கொணர்தல். (மாணவரிடம் தெளிவான எதிர்பார்ப்பை வெளிக்கொணருதல்)
- கடினமான விடயங்களைக் கையாளுவதை உடனிருந்து வெளிப்படுத்தல்.

  (இதுவரை செய்தவற்றினூடாக (கற்றவற்றினூடாக) வழிப்படுத்தல்)
- நேர்கையான பின்னூட்டலை வழங்குதல் - புள்ளிகளை அல்ல. (மாணவர்களின் செயற்பாடு களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வதை ஊக்கப்படுத்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சாதாரண கற்றல் முறைக்கும் விளைதிறனுள்ள கற்றல் முறைக்குமிடையிலான ஒப்பீடு | |
|---|---|
| *சாதாரண அணுகுமுறைகள்* | *மாணவர் மைய அணுகுமுறைகள்* |
| ● ஒழுங்குபடுத்தப்படாத இலக்கு | ஒழுங்குபடுத்தப்பட்ட, படிமுறையான வேலை |
| ● இலகுவானதைப் பெற்றுக்கொள்ளல் | சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் |
| ● இலக்கிலிருந்து விலகிச் செல்லுதல் | மதிப்பீட்டின் அடிப்படையில் அடுத்த படிமுறையை திட்டமிடல் |
| ● வேலையின் இடையே வினாவெழுப்புதல் | உதவி தேவை என உணரும் போது வினாவெழுப்புதல் |
| ● மற்றவர்களின் கருத்துக்கள் மீது கருத்துருவாக்கம் | கேட்டல், பார்த்தல், வாசித்தல், செய்துபார்த்தல் மற்றவர்களுக்கு சொல்லுதல் மூலம் கருத்தாக்கம் |
| | புதிய அறிகையுடன் முன்னைய அறிவை தொடர்புபடுத்தல் செயன்முறை<br>மற்றவர்களுடன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளுதல்<br>கற்றுக்கொண்டவற்றிலிருந்து சுய ஊக்கலைப் பெற்றுக்கொள்ளல் |

● மாணவர்கள் சிறந்த கற்றல் பாங்கைப் பெறுவதை உறுதிப்படுத்தல். (ஒவ்வொருவரும் தனக்குரிய கற்றல் பாங்கை விருத்திசெய்து கொள்ளல்)

## 4. விளைதிறனுள்ள கற்போரின் பண்புகள்

கல்வி அறிஞர்களினால் முன்வைக்கப்பட்டுவரும் சீர்திருத்தங்களும் முன்மொழிவுகளும் ஆசிரியர் மையக் கலைத்திட்டச் செயற்பாடுகளில் இருந்து மாணவர் மையச் செயற்பாடுகளாக மாற்றம் பெற்று வருகின்றது. அதற்கேற்ற வகையில் கற்றல்-கற்பித்தல் முறைகளும், கற்றல் வளங்களும், மதிப்பீட்டு முறைகளும் மாற்றமடைந்து வருகின்றது. அதேவேளை மாணவர்களின் கற்றல் பாங்குகளும் கற்றல் இடங்களும் பாடசாலைக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் வெளிச் சமூகத்திலும், இணையங்களினூடாக சர்வதேச ரீதியிலும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஆசிரியரும் தன்னை வளப்படுத்திக் கொள்வதுடன் மாணவர்களின் கற்றல் பாங்குகளுக்கேற்ப வழிப்படுத்தும், வசதிப்படுத்தும் வாண்மையாளராக நிலைமாற்றம் பெற வேண்டிய தேவையுள்ளது. ஆசிரியரின் கற்பித்தல் திறன்விருத்தி, ஆசிரியரின் வாண்மை மேம்பாடு, மாணவரின் கற்றலை மேம்படுத்தல், மாணவரின் செயற்பாட்டிற்கு வசதிகள் செய்துகொடுத்தல், பொருத்தமான கற்றல்-கற்பித்தல் சூழலை உருவாக்குதல் போன்ற செயன்முறைகளினூடாக வளங்களை பயனுறுதிமிக்கதாக்கல், விளைதிறனுள்ளதாக்கல், விருத்திசெய்தல் போன்ற செயற்கிரமங்களும் இங்கு பிரதானமாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாகும்.

### 4.1. விளைதிறனுள்ள கற்போர் புதிய தகவல்களை முன்னறிவுடன் தொடர்புபடுத்துவர்

கற்றலின் நீட்சியும், கருத்துருவாக்கமும் ஓர் இணைந்த செயற்பாடாகக் கருதப்படுகின்றது. முன்னர் கற்ற விடயங்களின் பின்னனி புதிய அறிகைக்கான கற்றல் சூழமைவை உருவாக்குவதில் பிரதான பங்கு வகிக்கின்றது. ஆசிரியரின் போதனா தத்துவ சவால்கள் மாணவரை முன்னறிவுடன் தொடர்புபடுத்துவதை தீர்மானிக்கின்றது. புதிய தகவல்களை முன்னறிவுடன் தொடர்புபடுத்த ஆசிரியரினால் பல்வேறு நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக பின்வரும் நுட்பங்கள் முன்னறிவை விரைவாக மீட்பதற்கு உதவுவதாக ஆய்வாளர்களினால் குறிப்பிடப்படுகின்றது.

(1) காட்சிப் படங்களுடன் கூடிய விளக்கம்

(2) விரைவான மீள்பார்வை (5 நிமிட)

(3) மூளைச் சலவையும் குழுவாக்கமும்

(4) வென்வரிப்படம் மூலம் விளக்கல்

(5) மனவரைபடம்.

(6) குழுநிலையில் கலந்துரையாடல்

### 4.2.விளைதிறனுள்ள கற்போர் கற்றல் செயன்முறையுடனும் கற்றல் சூழமைவுடனும் ஒரேநேரத்தில் ஈடுபாட்டுடன் இருப்பர்

மாணவர்களை ஈடுபடுத்தலுக்கான உளவியல் செயற்பாடு ஊக்குவித்தல் பொறிமுறையாக மாணவர் மையமாக உருவாக வேண்டும். இது ஆச்சரியத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. விளைதிறனுள்ள கற்போரை உருவாக்குதலில் மாணவருக்கு உதவுதல் - மாதிரி -2**

| |
|---|
| பிரச்சினை அல்லது எழுவினா தொடர்பில் வகுப்பறையில் ஒத்துழைத்து செயற்படுவதற்கான சூழமைவை ஏற்படுத்தி படிப்படியாக ஆசிரியரின் உதவியை விளக்கிக்கொள்ளுதல் |

| |
|---|
| சவாலான கற்றல் பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்ளுதல் |

| |
|---|
| அமைப்பாக்கப்பட்ட சோடிகளாக அல்லது சிறிய குழுவாக வேலைப்பகிர்வை வழங்குதல் |

| |
|---|
| மாணவர் தாம் பயன்படுத்தும் கற்றல் நுட்பங்களை பிரதிபலித்தல் செயல்முறையில் ஈடுபட ஊக்கப்படுத்தல். |

| |
|---|
| கற்றல் பிரச்சினை மீதான கவனத்தையும், தீர்வுக்கான திட்டத்தின் மீதும் கவனத்தை குவியப்படுத்தல் |

| |
|---|
| மாணவர் தாம் பெற்ற கற்றல் அனுபவங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளவும், மற்றவர்களின் அனுபவங்கள் பற்றிய கருத்துக்களைக் கூறவும், மதிப்பிடவும் சந்தர்ப்பம் வழங்குதலும் ஊக்குவித்தலும். |

வியப்பையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைய வேண்டும். மேலும் சுயநம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடியதாகவும் புத்தாக்கத்தை தூண்டுவதாகவும் அனுபவங்களை மட்டுப்படுத்தாமல் விரிவுபடுத்தக் கூடியதாகவும் இலகுவில் காரண, காரியங்களை நினைவுபடுத்தக் கூடியதாகவும் விரிவுபெற வேண்டும். தொடர்ந்து ஆசிரியர் வினாவுவதை மட்டும் மாணவர் சொல்ல முயற்சிக்காமல், கற்றல் சூழமைவில் மாணவர் கற்றுக் கொண்ட விடயங்களையும் பெற்றுக்கொண்ட அறிவையும் சுதந்திரமாக வெளிப்படுத்தவும் பிரயோகிக்கவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கேற்ப புதிய அறிவைக் கட்டுமானம் செய்வதற்கும் முயற்சிக்க வேண்டும்.

மாணவர் செயற்பாடுகளுக்கான ஆசிரியரின் நெகிழ்ச்சிப் போக்கு மாணவரின் ஈடுபாட்டையும், பொறுப்பையும் அதிகரிக்கச் செய்வதாக அமையும். பின்வரும் செயற்பாடுகள் மாணவரின் பங்குபற்றல் மட்டத்தை அதிகரிக்கச் செய்யும்.

- கால அட்டவணையின் படி கணிப்பீட்டுக்கான திட்டங்களை முன்வைத்தல்.
- பல்வேறு படிநிலைகளைக் கொண்ட கணிப்பீட்டு முறைகள்.
- கணிப்பீட்டு, மதிப்பீட்டு முடிவுப்பொருட்களில் பல்வகைமை.
- இலக்கை அடைவதற்கான பல்வேறு வழிமுறைகள்.
- இலக்கை அடைவதற்கான செயற்பாட்டில் தனித்து அல்லது குழுவாக இயங்குவதற்கான தெரிவு.

### 4.3. விளைதிறனுள்ள கற்போர் பெற்றுக்கொள்ளும் தகவல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வர்

தகவல்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளும் ஆற்றல் விளைதிறனுள்ள சிந்தனைக்கும் கற்றலுக்குமான அடிப்படையாகும். தேர்ச்சிமிக்க கற்போரால் தகவல்களை ஞாபகப்படுத்தும் ஒழுங்குமுறையை தனக்கு ஏற்றவகையில் தனித்துவமாகப் பேணுவர். கற்றல் நோக்கம் தகவல்களை மாணவருக்கு வழங்குவது மட்டுமன்றி, அதனைப் பயன்படுத்தும் போது அறிவையும் விழுமியங்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் அமைய வேண்டும். மாணவர்கள் தகவல்களை ஒழுங்குபடுத்துதல், கட்டியெழுப்புதல், மெருகுபடுத்துதல், தொடர்புபடுத்துதல் ஆகிய திறன்களை கொண்டிருப்பர். அவற்றை மாணவர்கள் அடைந்துகொள்வதற்காக ஆசிரியர்கள் சரியான வழிகாட்டல்களை வழங்க வேண்டும். இதற்காக பின்வரும் நுட்பங்களைப் பயன்படுத்தலாம்.

(1) வென்வரிப்படம்

(2) கதைகளைக் கொண்ட படங்கள்

(3) எண்ணக்கரு வரைபடம்

(4) தொடர்புகளைக் குறிக்கும் வரைபடங்கள்


(5) வரைபுகள்

### 4.4. விளைதிறனுள்ள கற்போர் உள்ளக வெளியக (சர்வதேச) கற்றல் வளங்களுடன் வினைப்படுவர்

கற்போரின் சிந்தனை பயன்படுத்தப்படும் கற்றல் வளங்களில் பெரிதும் தங்கியுள்ளது.. வளங்களின் உதவியுடன் மாணவர்கள் சிந்திப்பதற்கு வழிப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டும். இதனால் சமகாலத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மாணவர்கள் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் குறிப்பாக இணையப் பாவனையாளர்கள் சர்வதேச ரீதியிலும் கற்றல் வளங்களுடன் இடைவினைப்பட்டு தகவல்களை ஒழுங்குபடுத்த வேண்டிய நிலை காணப்படும். இவ்வாறான வகுப்பறைகளில் விமர்சன சிந்தனைக்கான [illegible] காணப்படுகின்றது. இதற்காக பின்வரும் நுட்பங்களைப் பயன்படுத்தலாம்.

(1) இணையம் *(Web based Learning Logs)*

(2) இலத்திரனியல் புத்தகங்கள் *(Journals)*

*Perkins* (1991) என்பவர் மாணவர் பெருமளவு தகவல்களை மிக இலகுவாகவும், விரைவாகவும் கணினியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனவும், வழிப்படுத்தப்பட்ட மாணவர் மையச் செயற்பாடுகள் மூலம் கற்றலில் உயர்மட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் குறிப்பிடுகின்றார். மனனம் செய்து கற்பதை விட, அவதானித்து, சிந்தித்து, விளங்கிக் கற்பதன் மூலம் கற்றல் செயன்முறைகளை விளைதிறனுள்ளதாக்கிக் கொள்வதற்கு பல்லூடகப் பயன்பாடு உறுதுணையாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று நவீன கற்றல்-கற்பித்தல் செயன்முறைகள் சாதாரண விரிவுரை முறையில் இருந்து பரவலடைந்து காணப்படுகின்றது. குறிப்பாக கற்றலுக்கான வளங்களை ஏற்பாடு செய்வதும், மாணவர் எவ்வாறு கற்பது என்பது பற்றி சிந்திப்பதற்கு மட்டுமன்றி, சிந்திப்பதற்காக சிந்திக்கத் தூண்ட வேண்டும். இதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுவதும் அவசியமாகின்றது. பொதுவாக ஆசிரியர்களால் முன்வைக்கப்படும் மாணவர் தொடர்பான பிரச்சினைகளுக்கு விளைதிறனுள்ள கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளைப் பிரயோகிக்கும் ஆசிரியர்களுக்கு இப்படிமுறைகள் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபா.ஜெயராசா

# சிறுவர் கல்வியும் அண்மைக் காலத்தைய ஆய்வு முடிவுகளும்



அண்மைக்காலமாக வளர்ச்சி பெற்றுவரும் நரம்பியல் விஞ்ஞானவியல் (Neuro Science) தொடர்பான ஆய்வுகள் சிறுவருக்குரிய நவீன கற்பித்தற் செயற்பாடுகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றன.

சிறுவர்களின் ஆற்றல் என்பது நாம் முன்னர் அறிந்தவற்றைக் காட்டிலும் மேம்பட்ட நிலையில் இருத்தலை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. குழந்தைகள் பிறந்ததிலிருந்தே அவர்களுக்குரிய உளமார்ந்த கற்கும் கொள்ளளவு வளர்ச்சியடையும் நிலையைக் கொண்டுள்ளது. பிறந்து ஓரிரு நாட்களுக்கிடையே மனித முகங்களை வேறுபடுத்திக் காணும் ஆற்றல் குழந்தையிடத்துக் காணப்படுகின்றது.

அந்நிலையில் ஒரே வகையான பொருட்களும் சூழலும் குழந்தைகளுக்குச் சலிப்பை ஏற்படுத்தி விடுவதனால், வேறுபட்ட பொருட்களையும் காட்சிகளையும் தருதல் அவர்களிடத்தே கற்கும் உற்சாகத்தை அதிகரிக்கச் செய்யும்.


குழந்தை ஆறுமாதமாயிருக்கும் பொழுதே சமூக நடத்தைகள் உருவாக்கம் பெறுதல் கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைகள் தமக்குரிய அறிவைத் திரட்டிக்கொள்ளும் செயற்பாட்டிலே பின்வரும் நிகழ்ச்சிகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைகின்றன.

- தகவல்களை விளங்கி, குறிப்பிட்ட வகையில் தமது அனுபவங்களுக்கு வியாக்கியானம் கொடுக்கின்றனர். புதியவற்றை எதிர்வுகூறும் திறனும் காணப்படுகின்றது.
- ஆரம்பத்தில் மனத்திலே பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட பதிவுகளை மீள்வடிவமைத்துச் செப்பனிட்டும் கொள்கின்றனர். மேலும் சிக்கலானதும் அருவமானதுமான பிரதிநிதித்துவப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய நிலை வளர்ச்சியடைகின்றது.
- சிறாரின் பிரதிநிதித்துவப்பாட்டு நடவடிக்கையில் பிறர் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் நனவிலி பூர்வமான செல்வாக்குகளை ஏற்படுத்திய வண்ணமிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு வயதுடைய சிறுவர்களின் செயற்பாடுகள் மிக நுணுக்கமாக நோக்கப்பட்ட வேளை ஒரு முக்கியமான விடயம் வெளிச்சத்துக்கு வந்தது. அதாவது, புதிய ஓர் அநுபவம் சிறுவர்களுக்குக் கிடைக்கப் பெறும் பொழுது வளர்ந்தவர்களின் செயற்பாடுகள் அவற்றுக்கு எதிர்மாறையாக இருந்ததால் புதியவற்றைத் தேடிக் கண்டறியும் செயற்பாடு அவர்களால் கைவிடப்படுகின்றது.

அண்மைக் காலமாக நிகழ்ந்துவரும் நரம்பியல் தொடர்பான ஆய்வுகளிலிருந்து பின்வரும் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

- பிறக்கும் பொழுதே குழந்தைகள் கற்கும் ஆற்றல் கொண்டவர்களாகவும், ஊக்கல் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.
- குழந்தை நிலையிலே அவர்களின் மூளை வளர்ச்சி மிக வேகமாக நிகழ்கின்றது. சூழலின் இயல்பு அந்த வளர்ச்சியை மேலும் துரிதமாக்கும்.
- பிறப்பிலிருந்தே தமது சூழலில் நிகழும் செயற் பாடுகளையும், பிறருடன் நிகழ்த்தும் இடைவினைகளையும் உள்ளத்திலே தொகுத்து இணைக்கும் ஆற்றல் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.
- ஒவ்வொரு சிறுவரும் தனித்துவமான உளக்கோலமுடையவர்களாக இருக்கின்றனர். அந்நிலையில் அனைத்துச் சிறுவருக்குமுரிய பொதுவான கற்றல் ஏற்பாடு தனித்துவத்தின் வளர்ச்சியைத் தடைசெய்து விடுகின்றது.

சிறுவரின் கற்றல் வளர்ச்சி தொடர்பான ஆய்வில் எழுந்த ஒரு முக்கியமான எண்ணக்கருவாக "அறிகைத் திரள்" (Schema) என்பது முன்வைக்கப்பட்டது. அதனை அடியொற்றியே சிந்தித்தலும் கற்றலும் முன்னெடுக்கப் படுகின்றது. அதனைத் தளமாகக் கொண்டு ஒருவர் தமது நடத்தைகளை மீள மீள உருவாக்குதலும் அதன் வழியாக அவர்களுக்குக் கிடைக்கப்பெறும் அநுபவங்களை உள்வாங்கி அறிகைத் திரளுடன் ஒன்றிணைத்துக் கொள்ளலும் இடம்பெறும்.

இந்தத் துறையிலே பியாசேக்குப் பின்னர் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் அதீ (Athey C-2007) என்பவர் அதிக முக்கியத்துவம் பெறுகின்றார். அவர் இரண்டாண்டுகளுக்கு மேலாக இந்தத் துறையிலே தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு ஐந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட உற்றுநோக்கற் பதிவுகளினைப் பகுத்தாராய்ந்து தனது கருத்துக்களை முன்வைத்தார். அவற்றின் அடிப்படையில் அவர் பின்வரும் அறிகைத் திரள்களைக் கண்டறிந்து வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) இயக்க நிலைக்குத்து *(Dynamic Vertical)*

(2) இயக்கப் பின்னும் முன்னும் *(Dynamic Back and Forthe)*

(3) இயக்க வட்டநிலை *(Dynamic Circular)*

(4) மேலும் கீழும் செல்லல் *(Going over and under)*

(5) வட்ட எல்லையை நோக்கில் செல்லல் *(Going Round a Boundary)*

(6) விசும்பைக் கவிப்புச் செய்தலும் உள்ளடக்குதலும் *(Enceloping and Containing Space)*

(7) எல்லையினூடாகச் செல்லல் *(Going Through Boundary)*

சிறுவர் ஓவியம் வரையும் செயற்பாடுகளை அடியொற்றியே மேற்குறிப்பிட்ட அறிகைத்திரள் வகைப்பாடுகளை அவர் வெளியிட்டார். பின்னர் அவர்கள்து விளையாட்டுக்களிலும், சிந்தித்தலிலும், மொழிக் கையாட்சியிலும் மேற்குறித்த அறிகைத்திரள் வகைப்பாடுகள் இருத்தலைச் சுட்டிக்காட்டினார்.

சிந்தனை அமைப்பின் வடிவமே அறிகைத் திரளாகின்றது. உதாரணமாக வட்டங்கள், பந்துகள், சில்லுகள், சுழலும் பொருட்கள் முதலியவற்றுடன் சிறுவர்கள் தொழிற்படும் பொழுது ***"இயக்க வட்ட"*** அறிகைத் திரள் சார்ந்த சிந்தனைகள் தொழிற்படும். படிகளில் ஏறும் பொழுதும் ஏணிகளைப் பயன்படுத்தும் பொழுதும் பொருட்களை உயர்த்தித் தூக்கும் பொழுதும் "இயக்க நிலைக்குத்து" அறிகைத் திரள் தொழிற்படும். பொருட்களைச் சுற்றிக்கட்டும் பொழுதும் கதவுகளை மூடும் பொழுதும் சிறுவரிடத்திலே "விசும்பைக் கவிப்புச் செய்தலும் உள்ளடக்குதலும்" என்ற அறிகைத் திரள் தொழிற்படும்.

இவ்வாறாகச் சிறுவர்களிடம் காணப்படும் அறிகைத் திரள் அமைப்புக்களைக் கல்விச் செயற்பாடுகளினால் எவ்வாறு வளம்படுத்துதல் என்பது பற்றியும் அவற்றினூடாக மேலும் கற்றலை எவ்வாறு முன்னெடுத்தல் என்பது பற்றியும் ஆய்வுகள் நிகழ்த்தப்படுகின்றன.

சிறுவருக்கும் முன்பள்ளிகளுக்குமுரிய பாடங்களைத் திட்டமிடும் பொழுதும், கலைத்திட்டத்தை அமைக்கும் பொழுதும் இவ்வாறான அறிகைத்திரள் அமைப்புக்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

சிறுவர் கல்வியில் சமீபகாலமாக முன்னெடுக்கப் பட்டுவரும் ஒரு நிகழ்ச்சி "விருத்தி நிலைப் பொருத்தமான செயற்பாடு" *(Developmentally Approproate Practice)* என்பதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் இன்று கற்பித்தல் நடவடிக்கைகளும் கலைத்திட்டமும் ஒழுங்கமைக்கப்படுகின்றன. இது பன்னிரண்டு முதன்மைக் கருக்களைக் *(Principles)* கொண்டது.

- சிறாரின் விருத்தி ஆட்சிகள்
- விருத்தி என்பது சார்பு நிலையில் தொடர் அமைப்பின் வளர்ச்சியைக் கொண்டது. ஏற்கனவே திரட்டப்பட்ட அறிவைக் கொண்டு மேலும் அறிவு திரட்டப்படும்.
- விருத்தி தனியாள் வேறுபாடுகளைக் கொண்டது.
- முன்னைய அனுபவங்கள் திரட்சி கொண்டிருப்பதுடன் ஒருவரின் வளர்ச்சியில் தாமதித்த விளைவுகளையும் உருவாக்கும்.
- விருத்தி மேலும் முன்னேற்றகரமானதும் சிக்கலானதுமான நிலைகளை நோக்கி எதிர்வு கூறக்கூடிய விதத்தில் நகர்ந்து செல்லும்.
- கற்றல் என்பது பன்முகமான சமூக பண்பாட்டுச் சூழமைவில் நிகழ்கின்றது.
- சிறுவர்கள் வினைப்படும் கற்போராக இருக்கின்றனர். புறவுலகும் சூழலும் பற்றிய அறிவைத் தமக்கே உரிய வகையில் அவர்கள் கட்டுமை *(Construct)* செய்கின்றனர்.
- உயிரியல் சார்ந்த முதிர்ச்சிக்கும் சூழலுக்குமிடையே நிகழும் இடைவினைகளாற் கற்றலும் விருத்தியும் நிகழ்கின்றன.
- அறிகை, எழுச்சி மற்றும் சமூக விருத்தியிலே விளையாட்டு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.
- தமது ஆற்றலுக்கு மேலான அறைகூவல்களை எதிர்கொள்ளும் பொழுதும், புதிய அனுபவங்களைத் திரட்டிக் கொள்ளும் பொழுதும் விருத்தி முன்னேற்றமடைந்து கொண்டு செல்லும்.
- தமக்கே உரியவாறு அறிந்தவற்றை வெவ்வேறு வகைகளிலும் விதங்களிலும் சிறுவர் பிரதிநிதித்துவம் செய்வர்.
- தமக்குப் பாதுகாப்பான சூழலிலும், தமக்கு மதிப்புத்தரும் சூழலிலும், தமது தேவைகள் நிறைவேற்றப்படும் சூழலிலும் சிறுவர்கள் சிறந்த முறையிலே கற்றலையும் விருத்தியையும் எதிர்கொள்வர்.

எமது சூழலிலே சிறுவர் கல்விமீது ஆர்வம் அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில் புதிய ஆற்று முடிவுகளையும், கண்டு பிடிப்புக்களையும் அறிந்துகொள்ளல் முக்கியமானதாகும். சிறுவர் கல்வி முற்றிலும் உளவியல் மயப்பட்ட செயல் முறையாகும். உளவியலுடன் இணைந்து சிறுவர் கல்வியிலே பண்பு நிலையான முன்னேற்றத்தையும் தரமேம்பாட்டையும் உயர்த்திச் செல்ல வேண்டியுள்ளது. உலகளாவிய முறையிலே முன்னெடுக்கப்பட்டு வரும் கல்வியின் தரநிலையான மேம்பாட்டிலே சிறுவர் கல்வியும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 3179 உம் அதன் பின்னரும்...!

3179 மலையக ஆசிரியர் நியமனத்தின் பின்னர் அது பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அதாவது மூன்று வருட காலத்தில் பின்வரான காலப்பகுதிக்குள் இது மேற்கொள்ளப்பட்டது.

இதற்கென ஒரு கேள்விக் கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டது. இதில் 14 வினாக்கள் சேர்க்கப்பட்டன.

இது ஒரு சிறந்த ஆய்வு என்றும் கூறலாம். அதிபர் ஆசிரியர்களிடமும் ஒருசில ஆசிரியர் ஆலோசகர்களிடமும் இக்கேள்விக் கொத்து வழங்கப்பட்டது.

பல பாடசாலைகளின் அதிபர்கள், சில ஆசிரியர்கள் இந்த 3179 ஆசிரியர் நியமனம் தொடர்பான கேள்விக் கொத்து தொடர்பில் அலட்டிக் கொள்ளாமை புதுமையாக இருந்தது என்றாலும் மற்றொரு பகுதியினர் தங்களது பாடசாலையில் கடமையாற்றும் இவ் ஆசிரியர்கள் பற்றி நிறைய கணிப்பீடு செய்திருக்கின்றனர் என்பதனை அவர்களது பதில்கள் காட்டின. இவர்களது பதில்களை முழுமையாக பரிசீலித்ததன் பின்னர் பொதுவான ஒரு முடிவுக்கு வர பல இடையூறுகள் இருந்தன. எனினும், இதன் மூலம் மேலும் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.



அதாவது, புதிய ஆசிரியர்கள் (3179) பற்றி மாத்திரமல்லாது அதிபர்கள் தொடர்பாகவும் சிந்திக்க வேண்டியேற்பட்டது. பகைப்பட்ட பல்வேறு மட்டங்களில் இப்புதிய ஆசிரியர்கள் உள்ளனர் என்பதும் புலனாகியது. அவர்கள் தொடர்பான வினாக்கள் பின்வருமாறு அமைந்திருந்தது.

*மலையக ஆசிரியர் நியமனம்: மூன்று வருடங்களின் பின்னர் ஒரு சிறந்த ஆய்வு*

(1) நியமன வகை/பாடம்:

(2) பாடசாலையில் கற்பித்த பாடம்:


(3) மூன்று வருட காலமாக (தொடர்ந்து) கற்பித்த பிறபாடங்கள்

(4) மூன்று வருட காலமாக கற்பித்த வகுப்பு: (உ-ம் -ஆரம்பக்கல்வி எனின் குறித்த வகுப்பு)

(5) மூன்று வருட அடைவு மட்டம்/ அதாவது முன்னேற்றம்: (உ-ம்) க.பொ.த சா/தரம் எனின் பெறுபேற்றின் நிலை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(6) மூன்று வருட காலத்தில் பின்னடைவு எனின் அது பற்றிய விளக்கம்: (உ-ம்) புலமைப் பரிசில் சித்தி யின்மை அதுபோல க.பொ.த சா/உ பெறுபேறு பின்னடைவு.

(7) இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்களிப்பு/ பெறுபேறு

(8) இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கெடுக் காமை/ பங்களிப்பு ஏதுமின்மை பற்றியது.

(9) பாடசாலை நிருவாக செயற்பாடுகளில் ஒத்துழைப்பு (பிரதி அதிபர்/ பகுதி அதிபர் என பங்கெடுக்கின் றமை) அவ்வாறு இல்லாவிட்டால் அது பற்றிய உங்களது கருத்துக்கள்.

(10) பாடசாலையில் பொதுவான செயற்பாடுகளில் அவர்களது பங்கு, பாடசாலை கலாசாரத்தை முன் னெடுப்பதில் உள்ள ஆர்வம்/ அல்லது புதிய நல்ல கலாசாரத்தை ஆரம்பித்தமை பற்றியது.

(11) தொழில் ரீதியான மனப்பாங்கு, சேவை உணர்வு, பற்று அல்லது உணர்வு ஏதும் இன்மை பற்றியது. (உ-ம்) மு.ப.8.00 பி.ப 2.00 என்ற செயற்பாட்டுப் போக்கு.

(12) பயிற்சியிலிருக்கும் இவர்களது மனப்பாங்கு மலையக கல்விக்கு உரமூட்டுமா? அர்ப்பணிப்பை எத்தனை வீதமாகக் கூறலாம். (100%)

(13) நீங்கள் (3179) மலையக ஆசிரியர் நியமனம் பற்றி என்ன எண்ணம் கொண்டுள்ளீர்கள்?

(14) வேறு ஏதாவது உங்களது கருத்து இருப்பின்:

இவ்வினாக்கொத்து தொடர்பாக நடைமுறை ரீதியாக ஒருசில பிரச்சினைகள் எழுந்தன. அதாவது குறித்த ஒரு பாடசாலையிலிருந்து அனைத்து மலையக புதிய (3179) ஆசிரியர்களிடமும் இதனைப் பெறுவதா? அல்லது வேறு எம்முறையைக் கையாளலாம் என்பது தொடர்பாக எழுந்தது. இறுதியில் குறித்த ஒவ்வொரு பாடசாலையிலும் இவ்வாசிரியர்களை நான்கு வகுப்புக்குள் கொண்டுவந்து அப்பகுப்புக்குள் அடங்கும் ஓரளவு அப்பகுப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொரு அல்லது இவ்விரு ஆசிரியர்களிடமிருந்தும் பதில்கள் பெறப்பட்டன. அதிபர்களிடமிருந்தும் பதில்கள் பெறப்பட்டன.

(1) முதலாவதாக நியமனம் தொடர்பாக சிலர் மனக் குறைகொண்டு உள்ளமையைக் காணக்கூடியதாக இருந்தது. அதாவது அவர்களுக்கு விரும்பிய பாடத்திற்கான நியமனம் கிடைக்காமை.

(2) வினாக்கள் அதிபரிடம் வினவுவது போல் உள்ள தால் ஆசிரியர்கள் பற்றி அதிபர்கள் கூற்றாக பல பதில்கள் காணப்பட்டன.

(3) குறித்த ஒரு நிறுவனத்தில் கடமைபுரிவோரைப் பற்றிய அடைவு மட்டம் தொடர்பான விடயம் நிறுவனத் தலைமையாலேயே உறுதிப்படுத்தப்பட வேண்டி உள்ளது. இதனால் அதிபர்களின் கணிப்பீடு பெருமளவில் சரியானதாகவே இருந்தது.

(4) நான்கு வகுப்பினர் என்பதை

அ. ஆ. இ. ஈ என்று எடுக்கலாம்.

அ. வகுப்பினர் மிகத் திறமையானவர் எனவும்

ஆ. வகுப்பினர் திறமையானவர் எனவும்

இ. வகுப்பினர் மத்திய நிலையினர் எனவும்

ஈ. வகுப்பினர் பலவீனமானவர் எனவும்

நாம் பாகுபடுத்திக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) மேற்குறித்த நான்கு வகுப்பில் முதலாம், இரண்டாம் நிலையிலுள்ளோர் எப்பாடசாலையில் மிக அதிகமாகக் காணப்பட்டனரோ அப்பாடசாலை யில் அடைவு மட்டங்கள் உயர்நிலையில் காணப் பட்டன. முன்னேற்றம் காணப்பட்டன எனலாம். இதற்கு மாறாக இ, ஈ வகுப்பினர் அதிகம் காணப் பட்ட பாடசாலைகளில் அடைவு மட்டம் முன் னேற்றம் குறைவாகவே காணப்பட்டது எனலாம்.

ஆனால் எல்லா பாடசாலைகளிலுமே இந்த நான்கு வகுப்பினரும் காணப்பட்டனர் என்பது புலனாகியது.

(6) நிருவாக செயற்பாடுகளில் ஒத்துழைப்பு, மேலதிக இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒத்துழைப்பு என்பனவும் நான்கு வகுப்பினராலேயே தீர்மானிக் கப்பட்டன. நல்ல ஒத்துழைப்புடன் பல செயற்றிட் டங்கள் முன்னெடுக்கப்பட்ட பல பாடசாலைகளும் அதேவேளை செயற்றிட்டங்கள் ஏதும் கண்டுகொள் ளப்படாத பாடசாலைகளும் காணப்பட்டன.

(7) நிறுவனத் தலைவரின் "ஆளுமை" எப்படிப்பட்ட "காய்களையும்" கூட வளமாக்கி பயன்பெற்றிட வழிவகுக்கலாம் என்பது ஓர் உண்மை.

ஏலவே நாம் கூறியது போல சில அதிபர்களின் ஆளுமை இன்மை, ஏனோ தானோ போக்கு அசி ரத்தை, தலைமைத்துவப் பண்பின்மை மாற்றங் களை உள்வாங்காமை போன்ற இன்னோரன்ன காரணங்களினால் 3179 புதிய ஆசிரியர்களில் சிலர் சரியான திசைக்கு திசைமுகப்படுத்தாமையும் நிகழ்ந்துள்ளது. (இன்றைய பயிற்சி இதற்கு விடை ஆகலாம்)

(8) பொதுவாக இப்புதிய ஆசிரியர்கள் மலையக கல்விக்கு வளமூட்டுவார்களா என்பது தொடர்பாக சரியான, தீர்க்கமான பதிலைப் பெற இயலவில்லை. எனினும் 50% விகிதமானோர் தொடர்பாக பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஏனெனில், இதில் பல "பதர்கள்" உள்ளதை மறைக்க இயலவில்லை. என்றாலும் இதனையும் விட இன்னும் சற்று அதிக விகிதத்தினரை அர்ப்பணிப்போடு சேவை செய்வார் கள் என எதிர்பார்க்கலாம்.

எனவே 3179 நியமனம் நிகழ்ந்து மூன்று வருடங் களின் பின்னர் அவர்களது சேவை, மனப்பாங்கு, போக்கு பற்றி ஓரளவு இவ்வினாக்கொத்து மூலம் தீர்மானிக்க முடிந்தது எனலாம். மேலும் தற்போது அவர்கள் பெற்றுக் கொண்ட அல்லது பெற்றுக்கொண்டிருக்கின்ற பயிற்சி கள் மூலம் மேலும் கணிசமான தொகையினர் முறைமை யான ஆசிரியர் வாண்மைக்கு உட்படுத்தப்பட்டிருப்பர் என எதிர்பார்க்கலாம். அத்துடன் சிலர் தொடர்ந்து பின்பற்றி வருகின்ற உயர்தகைமைக்கான தொழிற்சார் பயிற்சிகள், செயலமர்வுகள், உயர்கல்வித் தகைமைக் கான பயிற்சி நெறிகள் அவர்களை மேலும் பதப்படுத்தும் என எதிர்பார்க்கலாம். அவர்களை எவ்வாறு சமூக செயற் பாட்டாய்வாளர்களாக்குவது என்பது பற்றி சிந்தித்து செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டி உள்ளதை மறுத்தல் இயலாது.


**உயர் கல்விக்கு....!**

**PRINCE ACADEMY**

உயர்கல்விக்கான வாய்ப்பினைத் தக்கவைத்துக் கொள்வதற்கு வழிகள் பல உண்டு. ஆம்! தமிழ் பேசும் மாணவர்கள் மற்றும் உயர்கல்வி தொடர விரும்புவோர் நலன் கருதி *Prince Academy* வழிகாட்டுகிறது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை தொடர முடியவில்லை எனும் கவலை வேண்டாம். சர்வதேச உயர் டிப்ளோமா *(International Higher Diploma)* மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பினை பெற்றுக்கொள்ள இதோ அரிய சந்தர்ப்பம்..!

மிகக் குறைந்த செலவில் உயர்கல்வியைத் தொடர வங்கிக்கடன் மற்றும் இலகு தவணைக்கட்டண முறைகள் மூலம் சட்டம் *(Law)* மற்றும் அளவையியல் *(Quantity Surveying)* போன்ற துறைகளில் *(UK)* பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்ய *Price Academy* அனைத்து வழிகளையும் மேற்கொண்டுள்ளது.

மிகக் குறைந்த தகைமை : G.C.E.A/L பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி, எமது சேவை உங்கள் காலடியில்....!

**தொடர்புகளுக்கு:**

**PRINCE ACADEMY**

**HEAD OFFICE:**

No. 31-1/1, 42nd Lane, Colombo -06

Tel: 011-3172637 Hotline:077-5949272

**BRANCH:**

No.28, Bar Road, Batticaloa.
Tel:065-2223327

No.464, Hospital Lane, Jaffna.
Mobile: 077-7871649

E-Mail: princeenquiries@yahoo.com
Web:www.princeacademysl.com

விளம்பரம்/




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ.எல்.நௌபீர்

# அதிபர் – பாடசாலை – பெற்றோர் இணைவுகளும் விடுபடல்களும்

பாடசாலை ஒரு சமூக நிறுவனம். இந்த வகையில் பாடசாலைகளின் செயற்பாடுகள் பல்தரப்பட்டவைகளாகும். பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகளுடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இதுவே பாடசாலையின் உள்ளீடாக அமைகின்றது. எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களை உற்பத்தி செய்யும் முக்கிய தொழிற்சாலை பாடசாலைகளாகும். பாடசாலைகளின் பணிகள் யாவும் பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டே திட்டமிடப்படுகின்றன.

"நவீனமான அபிவிருத்தியினூடாக சமூக அபிவிருத்தி" என்ற அரசின் நோக்கில் தனியன்களாகிய மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை இனங்கண்டு விருத்தியாக்கும் நிறுவனங்களின் தலைமையதிகாரிகளே அதிபர்களாகும்.




பாடசாலைகளின் முதன்மை முகாமையாளர்களாக அதிபர்கள் காணப்படுகின்றனர். பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்தும் ஒரு கல்வி முகாமையாளராகத் திகழும் அதிபர் ஒரு பெறுமதிமிக்க வளமாகக் கருதப்படுகின்றார். திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், மதிப்பிடுதல் என்ற முகாமைத்துவ சிந்தனைகளின் முதுகெலும்பாகத் திகழும் அதிபர்கள் பின்வரும் கலைவண்மை விருத்தியுடைய வல்லுனர்களாகத் திகழ்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவை கொள்கை ரீதியான அறிவு திறன் உற்பத்தி தொழில்வளம் கற்பித்தல் திறன் முகாமைத்துவத் திறன், கவரும் ஆளுமை, நம்பகத்தன்மை என்பனவாகும்.

பாடசாலைகளை மையமாக வைத்துச் சுழலக் கூடிய சக்கரங்களாக மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி திணைக்களங்களுடன் பெற்றோர் என்ற உயிரியும் முக்கிய கூட்டாக இணைந்திருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. பாடசாலைகளை அமைக்கும் போது வெறுமனே போனால் போகட்டும் என்று ஏதாவதொரு இடத்தில் அமைக்கப்படுவதில்லை. மாறாக சனக்கூட்டத்தின் மத்தியிலேயே அமைக்கப்படுகின்றது. அவ்வாறு பாடசாலையை அண்டியதாகவே மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொள்கின்றனர். தொழிற்சாலைகளை ஓர் ஊரின் ஒதுக்குப்புறத்தில் அமைப்பதைப் போல் பாடசாலைகளை அமைத்துவிட முடியாது. பெற்றோர் சமூகத்தின் மத்தியில் உள்ள பாடசாலைகளே சிறப்பான இயங்கு தளத்தைக் கொண்டிருக்கும்.



## பெற்றோரும் அவர்களின் பொறுப்புக்களும்

குறித்த ஒரு பாடசாலைக்கு தங்களின் பிள்ளைகளை சேர்த்து அவர்களின் பாடசாலைக் கல்வி முடிவுறும் வரை (அரச பரீட்சைகள் எழுதி முடிக்கும் வரை) அவர்களைக் கண்காணிக்கும் ஒரு மக்கள் தொகுதியே அப்பாடசாலையின் பெற்றோர் எனப்படும். இங்கு பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் தாய், தந்தை, பாதுகாவலர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் பெற்றோர் என்ற வகுதிக்குள் அடங்குவர். பாடசாலையைச் சுற்றிலும் நிரந்தர வாழ்விடங்களை அமைத்து வாழ்பவர்களாக இவர்கள் இருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

## பாடசாலைக் கட்டமைப்பு

அரச பாடசாலைகளின் வரலாற்றில் எல்லாக் காலத்திலும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு என்று ஒரு வடிவில் பெற்றோரின் உள்வாங்கலுடனேயே பாடசாலைகள் இயங்கி வருவதைக் காணலாம். இக்குழுக்கள் பாடசாலையின் அபிவிருத்திக்கான பங்கு பற்றும் குழுக்களாக இயங்கும். பாடசாலையின் உள்ளார்ந்த நிருவாகத்தை பாடசாலை முகாமைத்துவ அணி ஒழுங்கமைத்துச் செயற்படுத்தும். அதேவேளை பாடசாலையின் வெளியக விடயங்களை இக்குழுவே முன் நின்று செயற்படுத்தும். இவ்விரண்டு குழுக்களினதும் இணைவாக அதிபரே செயற்படுவது ஒரு சிறப்பம்சமாகும்.

பெற்றோரின் தரத்திற்கு ஏற்பவே பாடசாலையின் வெளியீட்டு மட்டமும் காணப்படும். இவர்கள் தாம் வாய்ந்த சிந்தனைத் திறனும், அதிக ஈடுபாடும், ஒருங்கிணைந்த செயற்பாடும் கொண்டிருக்கும் போது குறித்த பாடசாலையிலேயும் 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த ( சா/த ), க.பொ.த (உ/த) பெறுபேறுகளில் உயர்மட்ட அடைவை பதிவளிக்கக்கூடியதாக இருக்கும். இங்கு பாடசாலைகள் குறைந்தமட்ட அடைவையும், வளர்ச்சி குன்றிய பெறுபேறுகளையும் சந்திக்கும் பொழுது அந்தப் பொறுப்பை வெறுமனே மாணவர்கள் மீதும், ஆசிரியர்கள் மீதும் சுமத்திவிட்டு பெற்றோர்கள் தப்பிக்க முடியாது. அதற்கான சரிசமான பங்கினைப் பெற்றோரும் ஏற்று வெட்கித் தலைகுனிய வேண்டும்.

மாணவர் ஒரு நாளில் வெறும் 07 மணித்தியாலங்கள் மட்டுமே பாடசாலைச் சூழலில் கழிக்கின்றனர். மீதி அதிக மணித்தியாலங்களை பெற்றோர்களுடனேயே செலவிடுகிறனர். இதில் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் பார்த்தல், அளவுக்கதிகமான விளையாட்டுக்கள், தேவையற்ற விடயங்கள் பேசுதல், மற்றவர்களுடன் அவசியமற்ற விதத்தில் கூடிக் குலாவுதல், அளவுக்கதிகமான பிரயாணங்கள் ஆகிய கவனக் கலைப்புக்கள் வீட்டுச் சூழலிலேயே மாணவர்களுக்கு ஏற்படுகின்றன. மேலைத்தேய சமூகம் தொடர்ந்தும் முன்னேறியதாக இருப்பதற்கு அவர்களின் கல்வி செறிப்புமிக்க பெற்றோர் சமூகமும் ஒரு முக்கிய காரணியாகும். எமது பெற்றோரும் ஓரளவு அறிவு நிலைச் சமூகமாற்றத்திற்கு உட்பட்டு வருவது எமக்கான சாத்தியமான ஒரு சமிக்ஞையாகும்.

பாடசாலைகளில் பெற்றோர் தொடர்பு ஏற்படக் காரணமாக அமைவது முக்கியமாக குறிப்பிட்ட பாடசாலை அபிவிருத்திக் குழுக்களில் அங்கம் வகிப்பதன் மூலமே யாகும். இவ்வாறு அமைக்கப்படும் குழுக்களினூடாக தங்கள் பங்களிப்பை பெற்றோர் வழங்க முற்படுகின்றனர். பாடசாலையின் பரிசளிப்பு விழாக்கள், புதிய கட்டிடத் திறப்பு விழாக்கள், கண்காட்சி விழாக்கள், கல்விச் சுற்றுலாக்கள், ஆசிரியர்தின விழாக்கள், வைத்திய முகாம்கள், மர நடுகை விழாக்கள், இல்ல விளையாட்டுப் போட்டிகள், கலாசார விழாக்கள் போன்றவற்றின் மூலம் பெற்றோர் அதிக பங்களிப்பை பாடசாலைகளில் வெளியிட வேண்டியுள்ளதை அவதானிக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிபர்கள் தாம் விரும்பிய விடயங்களை நிறைவேற்றுவதற்குப் பெற்றோர்களைச் சம்மதிக்கச் செய்வதையே குறியாகக் கொண்டு இயங்குகின்றனர் என்ற இந்த வாதம் நீண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக உள்ளது. இவ்வாறான விழாக்களில் பெற்றோரின் பங்களிப்பின்றி தயாரிக்கப்பட்ட திட்டங்களைப் பெற்றோர் மீது திணித்து அவற்றைச் செயலாக்கவும் பெற்றோர்களின் வெறும் விருப்பங்களை மட்டும் பெற்றுக்கொள்ளவே அதிபர் முகாமை செயற்படுகின்றது. நல்லவிடயங்களைப் பெற்றோர்கள் முன்வந்து சொன்னாலும் செய்தாலும் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் தவறுகள் ஏற்படும் போது மட்டும் அவற்றை பெற்றோர் மீதே சுமத்திவிடும் துர்ப்பாக்கிய நிலை பரவலாகக் காணப்படுகின்றது.

உதாரணமாக விழாக்களுக்கான அழைப்பிதழ்களை அச்சிடும்போது தேவையற்றவர்களின் பெயர்களை உள்வாங்குதல். இதனால் சமூகத்தால் முன்வைக்கப்படும் விமரிசனங்களுக்கு தனது தற்றுணிவால் செய்யப்பட்ட செயலாக இது இருந்தாலும் அதற்கான விடையாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமே அதைச் செய்தது எனக்கூறி அதிபர்கள் தப்பித்து விடும் நிலை. இது ஒரு அவலமான நிலையாக எம்மத்தியில் காணப்படுவதை யாரும் மறுக்க முடியாது. அல்லது இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது பெற்றோர் பிரதிநிதிகளுக்கு உரிய அதிகார எல்லையின் விரிவு நிலை பெரும்பாலான அதிபர்களால் மறைக்கப்பட்டே வருகின்றது. ஒரு பாடசாலையின் விபரங்களை அச்சிட்டு வைத்திருக்கும் பலகையில் பல தகவல்கள் உள்ளன. அதில் முதல் அதிபர் பெயருள்ளது. ஆனால் அப்பாடசாலையின் முதல் பாடசாலை அபிவிருத்திக் குழுத் தலைவரின் பெயரோ அது பற்றிய எந்தத் தகவலோ இல்லை. இவ்வாறு பெற்றோர்கள் சிலர் குறைபட்டுக் கொள்வதையும் காண முடிகின்றது.

### சமகாலத்தில் பாடசாலைகள் மீது பெற்றோரின் வகிபங்கு அதிகரிப்பதற்கான காரணங்கள்

அண்மைக்கால கல்வி வரலாற்றில் பெற்றோர்கள் பாடசாலை நோக்கி அதிக விழிப்படைந்து வருவதைக் காணலாம். அதற்கான முக்கிய காரணிகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- உலகின் கல்வி மட்டத்தில் ஏற்பட்டுவரும் முன்னோக்கிய பாய்ச்சல். உலகமயமாதல் இன்று உலகம் ஒரு கிராமம் என்ற நிலைமாறி *(Global Village)* உலகம் ஒரு சிப் *(Global chip)* என்ற நிலைக்கு மாற்றம் பெற்றுள்ளது.
- பாடசாலை அதிபர்களின் கல்விமட்டத்தைவிடவும் உயர்ந்த கல்வி மட்டத்தையுடைய பெற்றோர்களின் அதிகரிப்பு.
- கல்வியின் முக்கியத்துவமும் சமூக அபிவிருத்திக்கு கல்வியின் இன்றியமையாமையும் பற்றிய விடயங்களை நன்கு அறிந்த பெற்றோர்கள் சமூகத்தில் அதிகமாகக் காணப்படுதல்.
- அரசின் பிரதேச செயலகங்கள் தோறும் கல்விக் காரியாலயங்கள் எனும் திட்டத்தின் கீழ் கல்விக் காரியாலயங்கள் அதிகரிப்பால் அவற்றினூடான பெற்றோர் ஊக்குவிப்புக்கள் அதிகரித்தமை.
- அதிகரித்த தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் ஜீவனோபாயத்திற்கான சாதனமாக கல்வி மாறியுள்ளமையும்.
- பட்டப்பின் கல்வி கற்றவர்களும், உயர்தொழில் புரிபவர்களும் பெற்றோர் மத்தியில் அதிகரித்தமை.
- அரச ஊடகங்களின் பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு மீதான பிரச்சாரங்களின் அதிகரிப்பு. குறிப்பாக சிங்கள ஊடகங்கள் அவை பற்றிய அதிக கருத்தாடல்களைச் செய்து வருகின்றன.
- எந்தவொரு பாடசாலை முன்னேற்றச் செயற்பாட்டிலும் பெற்றோரின் பங்களிப்பும், பொறுப்பும் உட்புகுத்தப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கை.
- இன்றைய காலத்துப் பிள்ளைகள் பாடசாலை நிகழ்வுகளில் தங்கள் பெற்றோரை கட்டாயப் படுத்தி கலந்துகொள்ளச் செய்வதும் பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்கின்றது.
- முதலாளித்துவப் போட்டிச் சிந்தனை பெற்றோர் மத்தியில் அதிகரித்துச் செல்கின்றமை. அடுத்தவரின் பிள்ளையைக் காட்டிலும் தன்பிள்ளை உயர்ந்த நிலைப் பெறுபேற்று மட்டங்களை அடைய வேண்டும் என்ற போட்டி மனப்பாங்கு காரணமாக பாடசாலை மீதான கவனத்தை அதிகரிக்கின்றனர்.
- பிராந்திய, தேசிய மட்டத்தில் நடைபெறும் கல்வி மற்றும் பெற்றோர் பற்றிய கலந்துரையாடல்களின் அதிகரிப்பு.

இவ்வாறு பெற்றோர்கள் பாடசாலைச் சமூகத்துடன் அதிகரித்த தொடர்பைப் பேணிவருவதை விரும்பாத கல்வி நடவடிக்கையாளர்களும் எம்மத்தியில் இல்லாமலில்லை. பாடசாலைப் புறக்கிருத்திச் செயற்பாடுகளின் போது அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கிடையிலான தவிர்க்கமுடியாத தொடர்புகள் ஏற்படுவதை சமூக நலன், பாடசாலையின் அபிவிருத்தி என்று நோக்காது தனது தனிப்பட்ட காரணங்களுடன் நோக்கும் அவல நிலையே இதுவாகும். இவ்வாறு பெற்றோர் பங்களிப்பை மழுங்கடிக்கச் செய்யும் அதிபர்களின் உந்துதல்களுக்கான பிரதான காரணிகளாகப் பின்வருவனவற்றை நோக்கலாம்.

பெற்றோரின் வகிபங்கு அதிகரித்தலை அதிபர்கள் விரும்பாமைக்கான காரணங்கள்:

- முகாமைத்துவத் திறனும் நுட்பமும் குறைந்த /அற்ற நிலையில் பாடசாலையின் முகாமையைச் செய்ய முற்படுதல்/பணிக்கப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சந்தேகம் பதட்டம் பெற்றோர் மீதான இயல்பான வெறுப்பு பெற்றோரின் ஈடுபாடு மீதான எதிர்மறை யான சிந்தனை.

- பெற்றோர் சமூகத்தினதும் உறுப்பினர்களின் (OBA,SDS,SDC) அறிவு மட்டத்தைப் பார்க்கிலும் அதிபர்களின் கல்வி மட்டம் குறைவாக இருத்தலால் தாழ்வு மனப்பாங்கு அதிகரித்தல்.

- ஏதாவதொரு பொறுப்பை முற்றுமுழுதாக பெற் றோர் சமூகத்திடம் ஒப்படைத்து அவர்கள் அதைச் செய்து முடிக்கின்றபோது அதன் உயர்ந்த பெறு பேற்றின் மூலம் மக்கள் அதிபரைப் பார்க்கிலும் பெற்றோரை உயர்வாகப் பேசுவார்கள் எனவே தங்கள் சார்பான பிரதிமை பாதிக்கப்படலாம் என்ற பயம்.

- அரசியல் காரணிகள்- தமது பிராந்திய அரசியல் செயற்பாடுகளுக்கான ஒரு அறிமுக வழியாக பாடசாலைச் செயற்பாடுகளை சில தரம் குன்றிய பெற்றோர்கள் பயன்படுத்த முற்படுகின்றமை.

- OBA,SDS,SDC ஆகியவற்றின் உறுப்பினர்கள் பொதுமக்களால் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டங்களின் போதே தெரிவுசெய்யப் படுகின்றனர். அப்போது அதிபருக்கு விருப்பமில் லாதவர்களும் தெரிவு பெறலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிபர்கள் இவர்களுடன் சேர்ந்து செயற்பட ஆர்வம் காட்டுவதில்லை.

- குறிப்பிட்டளவு ஊழல்களில் ஈடுபடும் அதிபர்கள் *(Quality inputs ,Grade one admissions, GILD, Midday Meal programme)* இவற்றை பெற்றார் அறிந்துவிடக் கூடாது என்பதில் கருத்தாக இருத்தல்.

- நிருவாகச் சீர்கேடு நடைபெறும் பாடசாலைகளின் அச்சீர்கேட்டை பெற்றோரும் அறிந்துவிடக் கூடும் என்ற அச்சத்தில் அதிபர்கள் அவர்களின் ஈடுபாட் டைத் தவிர்க்கின்றனர்.

- கல்வியதிகாரிகள், உயர்மட்டக் குழுக்கள் பாட சாலைக்கு சமூகமளிக்கும் போது பெற்றோர்கள் நேரடியாக பாடசாலையின் குறைகளைச் சொல்லி விடுவார்கள் என்ற பயம்.

- மாணவர் தங்குமிட விடுதிகள் உள்ள பாடசாலை களில் தரம் குறைந்த உணவுகள் பரிமாறப்படும் போதும் அவற்றை உரிய பெற்றோர்கள் கண்டுவிட லாம் என்பதாலும் அவர்களின் ஈடுபாட்டைக் குறைக்கின்றனர்.

- குறித்த பாடசாலையுடன் பெற்றோரின் ஈடுபாடு அதிகரிக்கும் போது அப்பாடசாலை தொடர்பான விடயங்களைப் பெற்றோர் வேறு பாடசாலைக ளுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்ற அச்சத்திலும் அதிபர்கள் தவிர்க்கின்றனர்.

- SDS,SDC ஆகிய உறுப்பினர்கள் பற்றிய தவறான புரிதலை அதிபரிடம் சக ஆசிரியர்கள் எடுத்துக் கூறித் திசை திருப்பும்போது அதிபர் அவற்றை செவி மடுத்தல்.

குறிப்பாக பாடசாலையில் சம்பளம் பெற்று பணி புரியும் ஆசிரியர்களதும் பாடசாலைக்காக பொதுநல நோக்குடன் ஈடுபாடு காட்ட முற்படும் பெற்றோர்கள தும் வகிபாகம் என்ன என்ற அறிவுசார் விடயத்தில் அதிபர்கள் இன்னும் தெளிவு பெறவில்லை. ஆசிரியர் களுக்குரிய இடத்தை ஆசிரியருக்கும், பெற்றோருக்கான இடத்தை பெற்றோருக்கும் வழங்கி முகாமை செய்ய அதிபர்கள் முயற்சிக்க வேண்டும்.


இன்று பாடசாலைகள் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப தொழிற்பட வேண்டிய பொருளாதார நிறுவனங்கள் என்னும் கருத்து வலுப்பெற்று வருகின்றது. இதனால் வாடிக்கையாளர் நலன்கள் முக்கியமானது. ஆகவே மாணவர் பெற்றோர் நலன்கள் சார்ந்து அதிபர் சிந்திப்பதும் செயற்படுவதும் தவிர்க்க முடியாது.

பொதுவாக பாடசாலை பற்றிய சிந்தனை மாற்றங்களினால் அதிபர் பதவி தொடர்பான எண்ணக்கருக்களிலும் பொருள்கோடலிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் நடைமுறையில் இவற்றுக்கு எதிர்மாறாகவே அதிபர்கள் இயங்கி வருகின்றனர். இன்னொருபுறம் அரச பாடசாலைகளின் அதிபர்கள் பெரும்பாலும் கொள்கை வடிவமைப்பில் பங்கேற்பதில்லை. இதனால் மேலிருந்து கசிந்துவரும் தீர்மானங்களின் படி முகாமை செய்பவராகவே அதிபர் இந்தத் தருணம் வரை உள்ளார். அதாவது வெறும் நிருவாகியாகவே உள்ளார். இந்த முரண்பாடு அதிபரது அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை, விழுமியம் சார்ந்த அம்சங்களில் பிரதிபலிக்கிறது. இதன் உச்சமாகவே பெற்றோரை விரும்பாத மதிக்காத பண்புகளால் அதிபர் வழிநடத்தப்படுகின்றார்.

***எனது பாடசாலை*** என்று சிந்திக்கும் ஆசிரி யருக்கும் ***எனது பிள்ளையின் பாடசாலை*** என்று சிந்திக்கும் பெற்றோருக்குமிடையில் ஒரு சிறந்த பாலமாக அதிபர்கள் இயங்க வேண்டும். ஆசிரியர்களுக்கு வேண்டுமென்றால் இன்னொரு பாடசாலைக்கு இட மாற்றம் பெற்றுச் செல்லலாம், மாறாக பெற்றோர் தொடர்ந்தும் பெற்றோராகவே இருப்பார்கள். மரபு ரீதியில் பெற்றோர் என்றால் கல்வியறிவு குன்றிய பாமர மக்கள் குழுமங்களாகவே இருந்தார்கள். இன்று நிலைமை மாறியுள்ளது. பெற்றோர்கள் வைத்தியர்களாக வும், பொறியியலாளர்களாகவும் பெரும் நிருவாக சேவை உத்தியோகத்தர்களாக காணப்படும் நிலை இன்றுள்ளது. இப்புதிய மாற்றத்தை அதிபர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பது கவலைக்குரிய விடயமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.அதிதரன்

# தனியார் பல்கலைக்கழகங்களும் வறிய மாணவர்களும்



**தனியார் பல்கலைக்கழகங்களின் வரவும் வறிய மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களும்**

இலங்கை வைத்தியக் கல்லூரியையும் பல்கலைக்கழகக் கல்லூரியையும் இணைத்து 1942இல் உருவாக்கப்பட்டதோடு ஆரம்பித்த இலங்கைப் பல்கலைக்கழக கல்வியின் வரலாறு காலத்திற்கு காலம் வெவ்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி கண்டு தற்போது விவாதத்திற்குரிய அம்சத்தினை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

1972ம் ஆண்டின் 1ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் மூலம் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் ஒரு வேந்தரின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் அவை வளாகங்களாகப் பெயரிடப்பட்டன. உதாரணமாக இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகம், பேராதனை வளாகம் என அழைக்கப்பட்டன. எனினும் 1978ம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம் இயற்றப்பட்டதனைத் தொடர்ந்து வளாகங்கள் என அழைக்கப்பட்ட சகல வளாகங்களும் பல்கலைக்கழகங்களாகப் பெயரிடப்பட்டு வளாக அதிபதிக்குப் பதில் உபவேந்தர்கள் என்ற பதவியும் வழங்கப்பட்டது. தற்போது பல்கலைக்கழகக்கல்வி அரச தனியுரிமையாக காணப்படுவதுடன் நாடெங்கிலும் 14 தேசியப் பல்கலைக்கழகங்களும் ஒரு திறந்த பல்கலைக்கழகமுமாக மொத்தம் 15 பல்கலைக்கழகங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

1939ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் உப பிரிவில் உப பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு கல்வியில் சம வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் மத்திய மகா வித்தியாலயங்களைப் பரவலாக்குதல், பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் என்பனவும் அதன் மூன்றாம் உப பிரிவில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூக விழிப்புணர்வும் இலவசக் கல்வி வாய்ப்புக்களின் விரிவாக்கமும் கல்விக்கான கேள்வியை உயர்வடையச் செய்துள்ளன. தற்போது 2010ல் ஆரம்பநிலையில் மாணவர் சேர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

331995 ஆக காணப்படுகிறது. இது ஏறத்தாள 98% மானதாகும். இவ் உயர்கேள்வியின் தொடர் பரிமாண மாக உயர்கல்விக்காக கேள்வியும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

| அட்டவணை 1 | |
|---|---|
| ஆண்டு | ஆரம்ப நிலையில் மாணவர் சேர்வு |
| 2007 | 334641 |
| 2008 | 330448 |
| 2009 | 323422 |
| 2010 | 331995 |
| | Source: UGC |

அண்மை ஆண்டுகளில் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றுவோரில் அண்ணளவாக 10% இற்கும் குறைவான மாணவர்களே தேசியப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகின்றனர் (இது பல்கலைக்கழக தகைமை பெற்றோரின் சதவீதமாக ஏறத்தாள 16-17% என்றளவாக காணப்படுகின்றது) இங்கு அனுமதிக்கான தகைமை பெற்றவர்களில் 80% இற்கும் அதிகமானவர்களிற்கு பல்கலைக்கழக அனுமதி கிட்டுவதில்லை என்பது பாரதூரமான ஒரு விடயமாகும். 13 வருடங்கள் ஏட்டுக்கல்வி முறைமை ஒன்றினுள் தமது காலத்தை செலவளித்த மாணவர்களிற்கு பல்கலைக்கழக கல்வி வாய்ப்பு கானல் நீர்போல ஆகிவிடுகின்றது.

பொருத்தமற்ற மதிப்பீட்டு முறைகளை கொண்ட கல்வி முறையில் வெறும் மூன்று மணிநேர பரீட்சை ஒன்றினூடாக மாணவர்கள் அளவிடப்படுவதென்பது விமரிசனங்களிற்கு உள்ளாகிய ஒரு விடயமாகும். ஆனால் இதற்குமப்பால் இவ்வாறான முறைமையின் ஊடாக தகைமைபெறும் பெருமளவானோரிற்கு உயர்கல்வி வாய்ப்பு மறுக்கப்படுகின்றது. தொழிற்கல்விக்கான சந்தர்ப்பங்களை கொண்டிராத கல்விமுறை மற்றும் சுய தொழில் வாய்ப்பிற்கான பொருளாதார வாய்ப்புகளினதும் அடிக்கட்டுமானங்களினதும் போதாமை என்பன இணைந்த வகையில் தொழிலுக்கான சந்தர்ப்பங்களையும் மட்டுப்படுத்தி நிற்கின்றது.

குறைந்தளவான உயர்கல்வியின் சமூகப் பயன், உலகவங்கி போன்ற உதவி வழங்கும் நிறுவனங்களின் அழுத்தம் போன்றன காரணமாக உயர்கல்வியின் மீதான அரசின் பங்களிப்பு பொதுக்கல்வியுடன் ஒப்பிடும்போது குறைவடைந்து செல்வது அவதானிக்கத்தக்கதாகும்.

அட்டவணை - 2

க.பொ.த (சா/த) க.பொ.த (உ/த) பரீட்சைகளில் அமருவோரும் தகைமை பெறுவோரும்

| விபரம் | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|
| க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றியோர் | 456898 | 283197[a] | 379280[a] | |
| க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றியோர் | 201229 | 210100 | 207536 | 230237 |
| பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை (Yes) பெற்றோர் | 121421 | 130236 | 125284 | 142381 |
| பரீட்சைக்கு தோற்றியோர் சார்பாக (Yes) தகைமை பெற்றோர் சதவீதம் | 60 | 62 | 60 | 62 |
| பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் | 20069 | 20846 | 21547 | 21730 |
| Yes தகைமையின் சார்பாக அனுமதி பெற்றோர் சதவீதம் | 16.53 | 16.01 | 17.20 | 17.70 |
| | | | | UGD Department of Examination |


அட்டவணை - 3

அரசின் கல்விச் செலவு ஒதுக்கீடு (G.D.P யில்)

| | 1980 | 1985 | 1990 | 1995 | 2000 | 2005 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|
| கல்விக்கான ஒதுக்கீடு | 2.89 | 2.82 | 3.34 | 3.41 | 2.88 | 2.90 | 2.02 |
| பல்கலைக்கழக கல்விக்கான ஒதுக்கீடு | 0.41 | 0.40 | 0.37 | 0.47 | 0.45 | 0.5 | 0.27 |
| | | | | | | | (Source: UGC) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேகமாகக் குறைவடைந்து செல்லும் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி மீதான அரச ஒதுக்கீடு பல் கலைக்கழகங்களின் ஆளணி, மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறையை தோற்றுவிப்பதுடன் மாணவர் தொகையையும் அதிகரிக்க முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. இது தவிர பல்கலைக்கழக கல்வியின் தரரீதியான பிரச்சினைக்கும் இது முக்கியமான காரணமாக அமைந்து விடுகின்றது. அரசினால் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் குறைப்பிற்கும் தனியார் பல்கலைக்கழகங்களை கொண்டு வந்தே தீருவது என்ற செயற்பாட்டிற்கும் இடையே பொருளாதார ரீதியான முனைப்புக்களே மேற்கிளம்பி நிற்கின்றன.

எது எவ்வாறாயினும் பல்கலைக்கழக அனுமதிக் கான தகைமை பெற்றும் அனுமதி கிடைக்கப் பெறாத மாணவர்களிற்கான உயர்கல்விச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருவதற்கான ஒரு முயற்சி என்ற வகையில் தனியார் பல்கலைக்கழகங்களின் தேவை தவிர்க்க முடியாதது என்பது உண்மையே. ஆனால் அரசு தனியார் பல்கலைக்கழகங்களை நாட்டிற்குள் கொண்டுவரும் பின்னணியில் உயர்கல்விச் சந்தர்ப்பங்களை விரிவுபடுத் தும் நோக்கங்களிற்கும் அப்பால் பொருளாதார நலன்களே முற்கிழம்புகின்றன.

இன்று வருடாந்தம் 15000-20000 மில்லியன் ரூபா பணம் வெளிநாடுகளில் உயர்கல்வி பெறச் செல்லும் மாணவர்களால் நாட்டைவிட்டு வெளியசைகின்றது. இது இலங்கையின் பொருளாதாரத்திற்கு அனுகூலமான விடயமாக இருக்கவில்லை என்பதுடன் இவ்வாறு வெளிநாடுகளிற்கு உயர்கல்விக்காக சென்றவர்கள் தாய்நாட்டிற்கு மீளத் திரும்புவதில்லை என்பது இன்னொரு அம்சமாகும். எனவே இலங்கைப் பொருளா தாரம் பெறுமதி மிக்க மூளைசாலிகளை இழப்பதுடன் *(Brain drain)* வருடாந்தம் 150 millon இற்கும் அதிகமான நாணய வெளியசைவையும் எதிர்கொள்கின்றது. உயர்கல்விக்கான சந்தர்ப்பங்களை விரிவாக்குவது என்ற போர்வையில் மெல்ல மெல்ல உயர்கல்வி/ பல்கலைக் கழக கல்வியில் இருந்து ஒதுங்கிக் கொள்வதற்கும் மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடுகளிற்கு செல்வதால் ஏற்படக்கூடிய பொருளாதார ரீதியான பிரதி கூலங்களை குறைப்பதற்குமான ஒரு தந்திரோபாய மாகவே அரசு தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

எவ்வாறாயினும் தனியார் பல்கலைக்கழகங்களின் உள்வருகை உயர்கல்விச் சந்தர்ப்பங்களை மட்டும் விரிவாக்கப் போவதில்லை. அதன் மற்றைய பரிமாணம் கல்வி வேறுபாடுகளையும் சமூக - பொருளாதார வர்க்க வேறுபாடுகளையும் நிச்சயமாக விரிவடையச் செய்யப் போகின்றது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. சுமார் ஐந்து இலட்சம் முதல் 75 இலட்சம் வரை செல விட்டு வெளிநாடுகளில் இதுவரை கல்வி பெற்று வந்த பொருளாதார ரீதியில் அனுகூலம் பெற்ற மாணவர்களே தனியார் பல்கலைக்கழகங்களின் அனுகூலங்களையும் பெற்றுக்கொள்ளப் போகின்றன என்பதை நாம் விளங் கிக்கொள்ள வேண்டும். தனியார் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் மாணவர் தொகையில் 20% புலமைப் பரிசில் அடிப்படையில் இலங்கை மாணவர்களிற்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து கொள்கையள வில் இருந்தாலும் இதன் எதிர்காலம் கேள்விக்குரிய தாகவே அமையும்.

இன்னொரு புறமாக தனியார் பல்கலைக்கழகங் களில்/ சர்வதேசப் பல்கலைக்கழகங்களின் இலங்கை வளாகங்களில் கல்வி பயில்வது வெளிநாட்டு மாணவர் களிற்கு ஒப்பீட்டளவில் மலிவானதாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாணய மாற்றுவீதம் காரணமாக) இதனால் பெருமளவான வெளிநாட்டு மாணவர்கள் இலங்கையின் தனியார் பல்கலைக்கழக கல்வியின் மீது கேள்வியினை ஏற்படுத்துவார்கள். இது இலங்கையில் தனியார் பல்கலைக்கழக கல்வியின் விலையை நிச்சயமாக அதிகரிக்கவே செய்யும். இதனால் இலங்கை மாணவர்கள் கூடிய விலை கொடுத்தே கல்வியை பெற வேண்டிய நிலை ஏற்படும். எவ்வாறாயினும் இக்கல்விச் சந்தை பொறிமுறையின் செயற்பாட்டினால் அரசாங்கமே அதிகூடிய நன்மைகளைப் பெறப்போகின்றது. அதாவது பெருமளவான அந்நியச் செலாவணி நாட்டிற்குள் உள்வரும் என்பதுடன் வரிப் பணப்பெறுகையும் அதிகரிக்கும்.

*அட்டவணை 4*

*தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளின் கல்விச் செலவு*

| *நாடுகள்* | *கல்விச்செலவு GDP % மாக* |
|---|---|
| இந்தியா | 4.1 |
| மலேசியா | 6.2 |
| தாய்லாந்து | 5.4 |
| இலங்கை | 2.9 |

வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வறிய கிராமப்புற மாணவர்கள் வளம் குறைந்த அரச பல்கலைக்கழகங்களில் பயில நேரிடும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.27% இனை மட்டும் 15 பல்கலைக்கழகங்களின் நடைமுறை, மூலதன செலவுகளிற்காக ஒதுக்கி பல்கலைக்கழகங்களை இயங்க வைத்துக்கொண்டு அவற்றினூடாக உலகத்தரமிகு கல்வியையோ அல்லது தனியார் பல்கலைக்கழகங்களிற்கு போட்டியான/இணையான விளைவுகளையோ எதிர்பார்ப்பது சாத்தியமானதல்ல. இன்று இலங்கையின் சில பின்தங்கிய பிரதேசப் பல்கலைக்கழகங்களை விட தலைநகரப் பாடசாலைகள் பல அதிகூடிய வள வாய்ப்புக்களை கொண்டிருப்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

இவ்வேறுபாடுகள் காரணமாக பின்தங்கிய பிரதேச பல்கலைக்கழகங்களில் சென்று பணியாற்ற பேராசிரியர்கள் விரும்புவதில்லை. இதனால் அரச பல்கலைக்கழகங்களிடையே ஆளணி, வள வேறுபாடுகள் அகன்று காணப்படுகின்றன. இதன் காரணமாக கிராமிய வறிய மாணவர்கள் அரச பல்கலைக்கழக முறைமையிலேயே வேறுபாடான தரமுடைய கல்வியை பெற்றுவரும் நிலையில் தனியார் பல்கலைக்கழகங்களின் வருகை இவர்களை "சட்டிக்குள்ளிருந்து அடுப்பிற்குள் விழும் நிலைக்கு" இட்டுச் செல்லப் போகின்றது. இன்னொரு புறமாக அரச பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் ஒப்பீட்டளவில் உலகில் குறைவான சம்பளத்தினை பெற்றுவரும் நிலையில் தனியார் துறையின் கவர்ச்சிமிக்க சம்பளங்கள், வசதிகளால் கவரப்பட்டு தனியார் பல்கலைக்கழகங்

*அட்டவணை 5*

*தலா மாணவரிற்கான வருடாந்தக் கல்விச் செலவு (ரூபாக்களில்)*

| | 1980 | 1985 | 1990 | 1995 | 2000 | 2005 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|
| மாணவர் ஒருவரிற்கான பொதுக் கல்விச் செலவு | 448 | 951 | 2023 | 4285 | 6436 | 12668 | 23920 |
| பல்கலைக்கழக கல்விச் செலவு | 14976 | 32332 | 37544 | 90836 | 111926 | 185057 | 181064 |

Source: UGC

வளர்ந்த நாடுகளிற்கும் அப்பால் ஆசிய, தென்னாசிய நாடுகளில் மிக குறைந்தளவான கல்விச் செலவை கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னிலை பெற்றுள்ளது. உலகிலே மலிவான கல்வியை வழங்குகின்ற நாடு என்ற பெருமையை தக்கவைத்துக் கொண்டு இருபத்தியோராம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள முடியாது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

தனியார் பல்கலைக்கழகங்களை கொண்டுவந்தால் அரச பல்கலைக்கழகங்களின் பல்கலைக்கழக கல்வியின் தர உறுதிப்பாட்டை உயர்த்திக் கொள்ளலாம் என எதிர்பார்க்கும் அரசாங்கம் அவ்வாறான ஒரு நிலை ஏற்படும் போது அரச பல்கலைக்கழகங்களிற்கும் தனியார் பல்கலைக்கழகங்களிற்கும் இடையே உருவாகப் போகும் தரநிலையிலான, மற்றும் வள நிலையிலான அகன்ற இடைவெளியை குறைக்க எத்தகைய திட்டத்தையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. செல்வந்த மாணவர்கள் கூடிய விலை கொடுத்து தனியார் பல்கலைக்கழகங்களில் சர்வதேச தரமான உயர்கல்வி

*அட்டவணை 6*

*குறித்த சில பல்கலைக்கழகங்களிற்கான நிதி ஒதுக்கீடு*

| *பல்கலைக்கழகம்* | *தொகை (000)இல்* |
|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 1199830 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 2103292 |
| களனியப் பல்கலைக்கழகம் | 1257180 |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 397606 |
| ஊவா வெல்லசப் பல்கலைக்கழகம் | 397149 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | 531051 |

(Source: UGC)-2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நோக்கி நகர்வடைடய முற்படுவர். இதனால் திறமைமிகு பேராசிரியர்களாக அரச பல்கலைக்கழகங் கள் இழக்கும் நிலையைக் கூட எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம். இதன் எதிரொலியாக அரச பல்கலைக்கழ கங்களில் பயிலும் வறிய மாணவர்களின் தரமான உயர்கல்வி வாய்ப்பு கேள்விக்குள்ளாக நேரிடும்.

ஆக மொத்தம் தனியார் பல்கலைக்கழகங்களை உள்ளே கொண்டு வருவதில் மிதமான அக்கறை காட்டும்

**அட்டவணை 7**
**பாடசாலையில் நூலக வசதி**

| பாடசாலை | தொகை | நிரந்தரநூலகம் உடையவை | | நிரந்தரநூலக அற்றவை | |
|---|---|---|---|---|---|
| | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| அரசபாடசாலைகள் | 9790 | 400 | 41% | 2000 | 20% |
| தனியார் பாடசாலைகள் | 85 | 68 | 80% | 17 | 20% |
| சர்வதேச பாடசாலைகள் | 87 | 87 | 100% | - | - |
| பிரிவெனா பாடசாலைகள் | 600 | 600 | 100% | - | - |

Source: Sri lanka Journal of Librarionship & information management (Val-1)

**அட்டவணை 8**
**பாடசாலைகளில் காணப்படும் இலத்திரனியல் சாதனங்கள்**

| | |
|---|---|
| கணினி | 10% |
| OHP | 10% |
| CD/DVD Player | 5% |
| T.V | 50% |

Source: Sri lanka Journal of Librarionship & information management (Val-1)

**அட்டவணை 9**
**பாடசாலை வகைகளின் பரம்பல்**

| மாகாணம் | 1AB | | 1C | |
|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| மேல்மாகாணம் | 162 | 23.2 | 259 | 13.4 |
| வடமாகாணம் | 63 | 9.0 | 122 | 6.3 |
| வடமத்தியமாகாணம் | 31 | 4.4 | 154 | 8.0 |
| ஊவா மாகாணம் | 52 | 7.4 | 183 | 9.5 |

அரச அரசுப் பல்கலைக்கழகங்களின் தரத்தை, வளங்களை ஆசிரியர்களின் சம்பளங்களை கவர்ச்சிகர மான முறையில் மாற்றியமைக்க தவறி வருகின்றது. அரச பல்கலைக்கழகங்களை தர நிலையில் வலுவான, பலமான நிலையில் வைத்துக்கொண்டு தனியார் பல்கலைக்கழகங்களையும் உருவாக்கும் பட்சத்தில் அது மிகுந்த வரவேற்பிற்குரிய விடயமாக அமையும்.

இலங்கையின் கல்வியமைப்பின் மிகப்பெரிய சவால் கல்வியில் நிலவும் நகர - கிராமஇடை வெளியும் அவ் இடைவெளிகளை நீடிப்புச் செய்யும் அரசின் வள பங்கீட்டு வேறுபாடுகளும்தான் இவ் கிராம - நகர இடை வெளிகளை மேலும் வளர்த்தெடுக்கும் ஒரு மேற்கட்டு மானமாகவே தனியார் பல்கலைக்கழகங்கள் அமையப் போகின்றன. இன்று இலங்கையின் கிராமப்புறங்களின் தரமான கல்விச் செயற்பாடுகளை கொண்ட பாடசாலை கள் மிக குறைவாகவே காணப்படு கின்றன. போதுமான ஆசிரிய ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் இன்மை முறையான மேற்பார்வையின்மை போன்ற காரணமாக கற்றல் - கற்பித்தல் மந்த நிலையிலேயே இடம்பெறுகின்றது.

இன்னொரு புறமாக கிராமப்புறங் களில் மிகச் சிறிய ஒரு சதவீதத்தினரே உயர்தர வகுப்புகளில் கல்வி பெறுகின்றனர். இதற்கு பொருளாதாரக் காரணிகளின் செல்வாக்கே அதிகமாக காணப்படுகிறது. இத்தகைய கிராமப்புறப் பாடசாலைகளில் தாய்மொழி வழிக் கல்வியையே பெறும் வாய்ப்புக் காணப்படுகின்றது. அதிலும் ஆங்கில மொழிப் பாடத்திற்கான முக்கியத்துவம் பெருமளவிற்கு புறக்கணிக்கப்பட்டு வருவது நோக்கத்தக்கது. பொருத்த மான ஆசிரியர்கள் இன்மை, பொருத்தமான கற்பித்தல் முறைமை இன்மை போன்றவற்றுடன் பிள்ளைகள் வாழும் மொழிச்சூழலும் இணைந்தவாறு ஆங்கில மொழியறிவு கிராமபுற மாணவர்களிற்கு மிக குறை வாகவே கிடைக்கப் பெறுகின்றது. இதனால் அறிவை பெறுவதற்கான மொழி சார்ந்த தடையை கிராமப்புற மாணவர்கள் அனுபவிப்பதற்கு தொழிற் சந்தையிலும் கேள்வியற்றவர்களாகி விடுகின்றனர்.

மேலும் பின்தங்கிய கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கான சந்தர்ப்பங்களும் பாட சாலை வகைப்படுத்தல் காரணமாக மறுக்கப்படு கின்றமை கவனிப்புக்குரியதாகும்.

மாகாண மட்டத்தில் காணப்படு கின்ற பாடசாலைகளின் வகை ரீதியான வேறுபாடுகள் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் உயர்தர வகுப்புக் கல்வியை, பல்கலைக்கழக கல்வி வாய்ப்பை நிராகரிப்பிற்குள்ளாக்கி வருகின்றது. அதாவது அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பெறும் சந்தர்ப்பங் கள் கூட பின்தங்கிய பிரதேச மாணவர்களிற்கு கிட் டாமற் போகின்றது.

இன்னொரு புறமாக மிதமான வளர்ச்சியை இது வரை வெளிப்படுத்தாத சர்வதேசப் பாடசாலை களின் தொகை தனியார் பல்கலைக்கழகங்களின் வருகையுடன் மிக வேகமாக அதிகரிக்கச் செய்யும். செயலளவிலும், கருத்தியல் நிலையிலும் வேறுபாடுகளை வார்ப்புச் செய்யும் இச்சர்வதேசப் பாடசாலைகள் தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 10

தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களின் சில கற்கைகளில் திறமை அடிப்படையிலான மாணவர் அனுமதி - 2009/2010

| கற்கைநெறி | கொழும்பு | நுவரெலியா | மட்டக்களப்பு | புத்தளம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| பொறியியல் | 156 | 3 | 1 | 3 | 0 |
| மருத்துவம் | 151 | 1 | 4 | 1 | 0 |
| கலை | 177 | 98 | 135 | 149 | 06 |

சூழலில் அதன் அடுத்தகட்ட உயர்கல்வி வாய்ப்புக்களில் காணப்பட்ட ஒரு உறுதியற்ற நிலை காரணமாக ஒரு தளம்பல் நிலைக்கு உட்டப்பட்டிருந்தன. எனினும் தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும் பட்சத்தில் இச் சர்வதேசப் பாடசாலைகள் பலநூறாகப் பல்கிப் பெருகும். ஆகமொத்தம் தனியார் பல்கலைக் கழகங்களின் வரவு பல்கலைக்கழக கல்விக்கும் அப்பால் இலங்கையின் பொதுக்கல்வியிலும் தனியார் துறை யினரின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யப்போகிறது. அரச இலவசக்கல்வி முறையிலேயே கட்டியெழுப்பப் பட்டு வந்த இடைவெளி பல்பரிமாணங்களில் நீண்டு செல்லப் போகிறது. அதாவது சர்வதேசப் பாடசாலைகள், தனியார் பல்கலைக்கழகங்களின் தரமான உயர்கல்விக் குரிய விலையை செலுத்த முடியாத வறிய பிள்ளைகள் இவற்றிலிருந்து ஓரங்கட்டப்பட்டு வசதி படைத்த செல்வந்தப் பிள்ளைகள் இவற்றின் அனுகூலங்களை பெறுவர். ஆங்கில மொழியறிவு, மேலைக்கலாசாரம் மற்றும் ஆளுமைப் பண்புகளுடன் உயர்வான கல்வியை பெறும் இச்செல்வந்த பிள்ளைகள் தொழிற் சந்தைகளில் சுதேச கல்வி நிறுவனங்களில் பயின்று வெளியேறும் பிள்ளைகளின் தொழிற் சந்தர்ப்பங்களை தட்டிப் பறித்து விடுவார்கள்.

கிராமப்புற மாணவர்கள் இட அமைவு பொருளா தார நிலை, சமூக கலாசார அம்சங்கள் போன்றனவற்றின் செல்வாக்கிற்குட்பட்டே தமது உயர்கல்வி வாய்ப்புக்க ளைப் பெற நேரிடுகின்றது. அரச பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையும் ஒரு விதத்தில் இவ்வறிய பின்தங்கிய கிராமப்புற மாணவர்களிற்கு சாதகமாக அமையவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட கூடிய தாகும். தற்போதைய பல்கலைக்கழக அனுமதிக் கொள் கையானது 40% அனுமதிகள் நாடளாவிய திறமை அடிப்படையிலும் 55% மான அனுமதிகள் மாவட்ட அடிப்படையிலும் 5% மான அனுமதிகள் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களிற்குமென ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்முறையின் காரணமாக வளர்ச்சி கண்ட நகரங்களில் வாழ்கின்ற மாணவர்கள் திறமை அடிப் படையிலான *(Merit)* அனுமதிகளில் மிக கணிசமான இடத்தினைப் பெற்றுவிடுகின்றனர். ஆனால் வறிய, பின்தங்கிய வளம்குறைந்த கிராமப்புற மாணவர்களால், நகர்ப்புறங்களில் தரமான கல்வி பெறும் மாணவர் களுடன் திறமை சித்தி அனுமதியில் போட்டியிட முடிவதில்லை. இதனால் கிராமப்புற மாணவர்களின், பின்தங்கிய பிரதேச மாணவர்களின் பல்கலைக்கழக வாய்ப்புக்கள் குறைவாக அமைகின்றன.

கொழும்பு மாவட்டம் பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் நாடளாவிய திறமைச் சித்தி *(Merit)* அனுமதியில் முறையே (156/524=29.7%) 29.7%, (151/456=33%) 33% என்றளவான அனுமதி வாய்ப்பைப் பெற்றுள்ளது. எனினும் மட்டக்களப்பு, நுவரெலியா, கிளிநொச்சி போன்ற பின்தங்கிய மாவட்ட மாணவர்க ளால் இத்திறமைச் சித்தி அனுமதியை மிக குறைவாகவே பெற முடிந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கதாகும்.


எனவே பின்தங்கிய பிரதேச வறிய மாணவர்களின் கல்வி வாய்ப்புக்கள் இலவச அரச பல்கலைக்கழக கல்வி முறைமையிலே நியாயத்துவமற்று அமைந்துள்ள நிலையில் தனியார் பல்கலைக்கழகங்களின் வரவு இப் பின்தங்கிய பிரதேச மாணவர்களின் உயர்கல்வி சந்தர்ப்பங்களை மட்டுப்படுத்தவும் மலினப்படுத்தவும் போகிறது. இது தவிர மறுபுறமாக அரச பல்கலைக்கழகங் களில் அனுமதி பெறபோகும் வறிய மாணவர்களின் கல்விசார் இடைவெளிகளை அகலிக்கச் செய்து அரச பல்கலைக்கழக பட்டதாரிகளிற்கான கேள்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே தனியார் பல்கலைக்கழகங்களின் வருகையானது உயர்கல்விச் சந்தர்ப்பங்களை விரிவாக்கு தல் என்ற ஒற்றைப் பரிமாணத்தை மட்டும் கொண்ட தல்ல. இதன் மற்றைய பரிமாணம் தான் கூடிய விசை கொண்டதாக அமையப் போகிறது. இப்பரிமாணத்தின் யதார்த்த நிலை சரிவர உணரப்பட்டு அரச பாடசாலை களும், பல்கலைக்கழகங்களும் மிக உயர்தரமான முறையில் மறுசீரமைக்கப்பட்டு அரச பொது, பல்கலைக் கழக தனியார் பாடசாலை, பல்கலைக்கழக கல்விக்கு இணையான வகையில் நிலைபேறாக்கப்படத் தவறின் C.W.W. கன்னங்கரா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இலவசக் கல்வி தனியார் பண்டமாக மாற்றப்பட்டு கூடிய விலை செலுத்துவோரிற்கு மட்டும் உரியதாக மாற்றப் படும் என்பதை மறுக்க முடியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு ஜவஹர்ஷா



# நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்

ஆசிரியமணி



**வினா:** *2000.07.12 ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து நான் பயிற்றப்பட்ட ஆசிரியராக 2002.05.14 அன்று பயிற்சியை முடித்து வெளியேறினேன். எனக்கு 2003.08.01 தொடக்கம் செயல்படும் பயிற்சிச் சான்றிதழே கிடைத்துள்ளது. இது சரியா?*

**விடை:** இந்த கேள்வி 2012ஆம் ஆண்டு ஜனவரி இதழில் வெளியிடப்பட்டு இருந்தது. அதில் பயிற்சி சான்றிதழ் செயல்படும் திகதி 2006.08.01 என தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது. ஆகையால் மீண்டும் அவ்வினாவுக்கான விடை பின்வருமாறு மீளத் தரப்படுகின்றது.

ஆசிரியர் பயிற்சி பொதுவாக முழுமையாக இரண்டு வருடங்களைக் கொண்டிருக்க வேண்டும். சில தாமதங்களால் வருட முற்பகுதியில் சேராமல் இடையில் சேர்க்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இறுதிப் பரீட்சை முடியும் திகதியும் முழுமையான காலமுமே இங்கு கணக்கில் எடுக்கப்படும். 82,84ஆம் வருடங்களில் ஜனவரியில் சேர்ந்தவர்களுக்கு மார்ச் முதலாம் திகதி தொடக்கம் செயல்படும் சான்றிதழ் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இதைப் பரீட்சை திணைக்களமே தீர்மானிக்கும். இதன்படி சான்றிதழில் செயல்படும் திகதி இடப்படும். அது பெரும்பாலும் முதலாம் திகதியாகவே இருக்கும். உங்களது செயல்படும் 2002.08.01 சரியானதேயாகும்.

**வினா:** *காலையில் பாடசாலை தொடங்கும் நேரம் 7.30 வரையும் அப்போது சிவப்பு கோடு அடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தீர்கள். 15 நிமிட சலுகை இருக்க வேண்டும் என்றும் அதன் பின்னரே கையொப்ப புத்தகத்தை மூட வேண்டும் என்றும் சில அதிகாரிகள் கூறுகின்றார்கள். எது சரியானது?*

**விடை:** 1982.02.27 திகதிய 1981/13 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையிலும் 2006.06.06 திகதிய 2006/26 இலக்கச் சுற்றறிக்கையிலும் பாடசாலை ஆரம்பமாகும் நேரம் 7.30 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்குப் பின்னர் மூன்று வேலை செய்யும் தினங்கள் அரை மணித்தியாலத்திற்கு குறைந்த நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதமாக வந்தால் அதைச் சேர்த்து அரைநாள் லீவு போட வேண்டும் என்பதே சுற்றறிக்கையின் விதியாகும்.

பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திற்குப் பின்னர் 15 நிமிடங்கள் கழிந்தவுடன் சிவப்பு கோடு இட்டு வரவு இடாப்பை மூடவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் உள்ளது. இந்த நேரம் 7.45 ஆகும். இதன் பின்னர் அன்று வராதவர்களை சிவப்பு நிறத்தால் பெயர் எழுதி காரணத்தைக் குறிக்க வேண்டும். இந்த இடைப்பட்ட 15 நிமிடம் சலுகை நேரம் அல்ல. அண்மையில் இங்குள்ள தேசியப் பாடசாலைக்கு கணக்காய்வுக்கு வந்த அதிகாரிகள் 7.30 மணிக்கும் கையொப்பம் இட இடமளித்து 7.31 சிவப்புக் கோடு போட வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள். எழுத்தால் உரிய அதிகாரியின் கையொப்பம் இல்லாமல் சொல்லப்படும். எந்த அறிவுறுத்தலும் செல்லுபடியாகாது. ஆகவே சட்டபூர்வமாக கையொப்பமிடப்பட்டுள்ள சுற்றறிக்கை களை மட்டுமே பின்பற்ற வேண்டும். இது கல்வி அமைச்சு சுற்றறிக்கையாக இருந்தாலும் சரி பொது நிருவாக அமைச்சு சுற்றறிக்கையாக இருந்தாலும் சரி இதன் முடிவே இறுதியானதாக இருக்கும். தாபனக் கோவையின் விதிகளின்படி தாபனப் பணிப்பாளர் நாயகமே இவை தொடர்பான தீர்மானங்களை எடுப்பார்.

**வினா:** ***2012ஆம் ஆண்டு அமுல் நடத்தப்பட ஆரம்பிக்கப்படுகின்ற "ஆரம்ப பாடசாலை வலைப்பின்னலுக்காக இடைநிலைப் பாட சாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத் திட்டத்தில்" நான் அதிபராக கடமை யாற்றும் பாடசாலையும் சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய பாடசாலையான இதன் ஆரம்ப பிரிவை மாகாணசபை பதிவு செய்து பொறுப்பு ஏற்றுள் ளது. இதற்கு பெயர் சூட்டுவது தொடர்பாக என்ன நடைமுறைகளை மேற்கொள்ளலாம்.***

**விடை:** மேல்சொல்லப்பட்ட வேலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு மாகாண சபை பாடசாலையாகப் பதியப்பட்ட பின்னர் அது உங்கள் நிருவாகத்தில் இருந்து அகன்று தனிப்பாடசாலையாக இயங்க வேண்டும்.

அப்பாடசாலைக்கென தனியாக நிருவாகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அல்லது பாடசாலை அபிவிருத்திக் குழு ஆகியவையே அவை தொடர்பான விடயங்களைத் தீர்மானிக்க அதிகாரம் உடையதாகும். முன்னாள் அதிபர் என்ற வகையில் உத்தியோகப் பற்றற்ற வகையில் நீங்கள் ஆலோசனைகளை வழங்கலாம். மேற்சொல்லப்பட்ட சட்டபூர்வமான விடயங்கள் அமுலாக சில மாதங்கள் எடுக்கலாம்.

புதிய ஆரம்ப பாடசாலைச் சமூகம் மாகாண சபைக்கு தமது ஏகமனதான தீர்மானங்களை மேற்கொண்டு தற்போது உரிய, சரியான பெயரை பதிந்து கொண்டால் நல்லது. எதிர்காலத்தில் இந்த புதிய பாடசாலைக்கு மட்டுமல்ல சுற்றியுள்ள இரண்டு, மூன்று ஊட்டல் பாடசாலைகளுக்கு நீங்கள் வசதி வாய்ப்புக்களை வழங்க வேண்டியவர் ஆவீர்கள்.

**வினா:** ***மத்திய கிழக்கில் வேலை செய்யும் எனது கணவரிடம் சென்று மூன்று மாதம் தங்கி வர நான் எவ்வாறு விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம். ஆசிரியையான நான் ஏப்ரல் முதலாம் திகதி சென்று ஜுலை 28ஆம் திகதியளவில் திரும்பவுள் ளேன்.***

**விடை:** நீங்கள் குறிப்பிட்ட காலம் மூன்று மாதத்திற்கு குறைவாக உள்ளபடியால் முறைப்படி அதிபர் ஊடாக வலயக் கல்விக் காரியாலயத்திற்கு விண்ணப்பித்துச் செல்லலாம். "2012 ஆம் ஆண்டு பாடசாலை தவணை என்ற தலைப்பிலான 2011/25 இலக்க சுற்றறிக்கைப்படி உங்களது லீவு பின்வருமாறு அனுமதிக்கப்படலாம்.

ஏப்ரல் 01 தொடக்கம் 05 வரை சம்பளமற்ற லீவு

ஏப்ரல் 06 தொடக்கம் 22 வரை சம்பளமுள்ள லீவு

ஏப்ரல் 23 தொடக்கம் ஜுலை 28 வரை சம்பளமற்ற லீவு


24/2007 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் மிகுதியாக 2006 தொடக்கம் இருந்த லீவை வைத்துக் கொண்டு மேல் உள்ள சம்பளமற்ற லீவை இல்லாது செய்யலாம். ஆனால் 2010.09.30ஆந் திகதி வெளியிடப் பட்ட 19/2010 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக் கையின் 05ஆம் பிரிவின்படி அந்த சலுகை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

**வினா:** ***15.05.1964 தொடக்கம் தோட்ட பாட சாலை ஆசிரியர் சேவையில் சேர்ந்த நான் 16.06.1977 அரச பாடசாலை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு 1999ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு ஓய்வூதியம் வழங்கப் படும் போது இது கணக்கெடுக்கப்பட்டதாக அறியமுடியவில்லை. இதை எப்படி தெரிந்து கொள்ளலாம்.***

**விடை:** ஓய்வு பெறும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் டிசு தாளில் இரண்டு பக்கமும் அச்சடிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடைதான் வழங்குவார்கள். இதில் இளைப்பாறும் போது வகித்த நியமனம், இளைப்பாறும் போது வயது, இளைப்பாறும் போது ஆண்டுச் சம்பளம், சேவைக்காலம் (மாதங்களில்), கொடை கொடுக்கப் பட்ட திகதி, மாற்ற முந்திய மாதாந்த ஓய்வூதியம், மாற்றிய பின்னர் மாதாந்த ஓய்வூதியம், மாற்றிய பணிக் கொடை போன்ற விடயங்கள் விபரமாகக் குறிப்பிடப் பட்டு இருக்கும். 1999.06.16 திகதி நீங்கள் ஓய்வுபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருந்தால் சேவைக்காலம் (மாதங்களில்) என்பதற்கு நேராக 421 மாதங்கள் என்று குறிப்பிட்டு இருந்தால் உங்களது தோட்டப் பாடசாலை காலம் கணக்கெடுக்கப்பட்டு இருக்கும். உங்களது சேவைக் காலம் 35 வருடங்கள் 1 மாதமாக இருக்கும் 77 வீதம் மாற்றிய பின்னர் மாதாந்த ஓய்வூதியமாக அப்போது பெற்ற சம்பளத்தில் இருந்து கிடைத்திருக்கும். கல்வித்துறையைச் சார்ந்த நாங்கள் அலுவலக படி ஏறி அவர்களிடம் விளக்கம் கேட்காமல் நாமே இவைகளை விபரமாக அறிந்துகொள்வதே நல்லது.

**வினா:** *இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த எனக்கு 2003ஆம் அரச சேவையில் முதலாம் வகுப்பு கிடைத்தது. அதற்கு முன்னரே கல்வி முதுமாணி பட்டம் பெற்றுள்ளேன். போட்டிப் பரீட்சையடி 2009.11.13 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் 2-II தரம் கிடைத்தது. தற்போது கிடைத்துக் கொண்டிருந்த வருடாந்தச் சம்பள ஏற்றம் 645 ரூபாவில் இருந்து 400 ரூபாவாக குறைந்துவிட்டது. எதிர்கால பதவி உயர்வின் போது கல்வி முதுமாணி பட்டத்தினால் ஏதாவது சலுகை கிடைக்குமா?*

**விடை:** வருடாந்த சம்பள ஏற்றம் 400 ரூபாவாக குறையும் என அறிந்து கொண்டுதான் பதவியை பொறுப்பு எடுத்து இருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். அதிபர் சேவையைப் பொறுத்தவரையில் கல்வி முதுமாணி பட்டத்தால் பதவி உயர்வுக்கோ வருடாந்த சம்பள ஏற்றத்திற்கோ எந்தவித நன்மையும் கிடைக்க மாட்டாது. இலங்கை அதிபர் சேவையின் புதிய பிரமாணக் குறிப்பு அமுல் நடத்தப்பட்டால் 2011.01.01 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் ஜிச.1 சம்பளத்திட்டத்தில் இரண்டாம் பகுதியில் உள்ளீர்ப்பு செய்யப்படுவீர்கள்.

**வினா:** *பல வருட காலமாக ஆசிரியராகக் கடமையாற்றிவரும் நான் கண்களில் உண்டான பாதிப்பு நிலைமையால் அங்கவீனர் என்ற வகையில் உள்ளேன். அதிபர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி 137 புள்ளிகளை எழுத்துப்பரீட்சையில் பெற்றுள்ளேன். வெற்றிடங்களை நிரப்பும்போது எனக்கு ஏதாவது சலுகை வழங்கப்படுமா?*

**விடை:** 1988.08.18 வெளியிடப்பட்ட 27/88 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அரசாங்க சேவையிலும் அரசாங்க கூட்டுத்தாபன சேவையிலும் வெற்றிடங்களை நிரப்பும்போது

1. அவ்வாறான வெற்றிடங்களில் 3 வீதமானவற்றை குறித்த தகுதிகளை உடையவரும், தமது அங்க இழப்பானது தமது கடமைகளுக்கு தடங்கலற்ற அங்கவீனர்களால் நிரப்புதல் வேண்டும்.

2. அவர்களின் நியமனமும், அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம்/ சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின்படி இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிபர் சேவை நியமனம் நியமனமா அல்லது பதவி உயர்வா என்ற தெளிவான விளக்கத்தை கல்வி அமைச்சும், பொது நிருவாக அமைச்சும் சேர்ந்து எடுக்க வேண்டும். வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேல் சொல்லப்பட்ட தகைமைகளை நீங்கள் கொண்டு இருந்தால் உங்களுக்கு நியமனம் கிடைக்க வேண்டும். இந்த 3 வீதம் அங்கவீனர்க ளுக்கான வெற்றிடமாக இருப்பதால் அவர்களுக்கு இடையில்தான் வெட்டுப்புள்ளியானது தீர்மானிக்கப்பட வேண்டும். இது போன்ற விடயம் தொடர்பாக தீர்மானம் எடுத்து தீர்வுகளை வழங்க உரிய அதிகாரிகள் கல்வி அமைச்சில் இல்லாததும் இருப்பவர்கள் இதுபோன்ற விடயங்களில் கவனமெடுத்து துரிதமாக செயல்படா மையுமே கவலைக்குரிய விடயமாகும். அதேபோல அங்கவீனர்கள் இது போன்ற விடயங்களை அறியாமல் இருப்பதும் அவர்களுக்குரிய உரிமை கிடைக்காமல் இருப்பதற்கு காரணமாகும்.

**வினா:** ***2005.01.01 தொடக்கம் இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II தரத்தைப் பெற்ற எனக்கும் 2007.01.01 தொடக்கம் இலங்கை ஆசிரியர் சேவையின் 2-II தரத்தைப் பெற்ற என்னுடன் கடமையாற்றும் ஆசிரியருக்கு ஒரே சம்பளமான 15,995 ரூபா கிடைத்து வந்தது. கடந்த மாதம் அவரின் சம்பளம் 16,955 ரூபா கிடைக்கின்றது. எனக்கும் அதே சம்பளமே கிடைக்கின்றது. இதுசரியா?***

**விடை:** 2007.08.24 திகதிய 06/2006(IV) இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையால் 2007.06.01 தொடக்கம் முரண்பாடு ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இந்த முரண்பாடு இல்லாவிட்டால் உங்களுக்கு 16,475 ரூபா வும் அவருக்கு 15,995 ரூபாவும் 2007.06.01 முதல் கிடைக்க வேண்டும்.

2010.12.31 திகதி வெளியிடப்பட்ட 28/2010 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைப்படி 2011.07.01 தொடக் கம் இந்த முரண்பாடு நீக்கப்பட்டுள்ளது. இதனால் 2007.06.01 தொடக்கம் 2011.06.30 நிலுவை எதுவும் இல்லாமல் உங்களது சம்பளமானது பின்வருமாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 2007.06.01 | - | 16,475 ரூபா |
| 2008.01.01 | - | 16,715 ரூபா |
| 2009.01.01 | - | 16,955 ரூபா |
| 2010.01.01 | - | 17,195 ரூபா |
| 2011.01.01 | - | 17,525 ரூபா |

மேல்சொல்லப்பட்ட 28/2010 இலக்கச் சுற்றறிக் கைப்படி உங்களுக்கு சம்பளம் மாற்றியமைக்கப் படவில்லை போல் தெரிகின்றது. அப்படிச் செய்யப்பட் டால் 2011.07.01 தொடக்கம் 17,525ரூபா அதாவது அவரைவிட 660 ரூபா அதிகம் உங்களுக்கு கிடைக்க வேண்டும். இது உங்களுக்கு மட்டுமல்ல முதலாம் வகுப்பை தவிர்ந்த மற்றைய சகல ஆசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டிய சம்பள மாற்றமாகும். கூடும் தொகைகள் வித்தியாசப்படலாம்.

**வினா:** ***ஆசிரியையான எனது சகோதரியின் கணவர் கடந்த மாதம் 10 ஆம் திகதி காலமாகிவிட்டார். அவருக்கு 4 மாதம் 10 நாட்கள் இத்தா லீவு கிடைக்க வேண்டும். இது எவ்வாறு அமையும்.***

**விடை:** தாபன விதிக்கோவையின் XII இலக்க அத்தியாயத்தில் உள்ள இது தொடர்பான விசேட லீவானது 2007.05.23 திகதிய 11/2007 மாற்றியமைக் கப்பட்டுள்ளது. இலக்கச் சுற்றறிக்கைப்படி பின்வருமாறு.


அரசாங்க சேவையில் உள்ள திருமணமான முஸ்லிம் பெண் அலுவலர் ஒருவருக்கு அவருடைய கணவரின் இறப்பின் மீது அது தொடர்பாக அவருடை இயைபு டைய அந்த வருட ஓய்வு லீவையும், அதேபோல அவரு டைய அரசாங்க சேவைக் காலப்பகுதியில் பயன்படாத கிடைக்கக்கூடிய ஓய்வு லீவையும் (திரட்டிய, காலங் கடந்த) பயன்படுத்தி, 4 மாதங்களும் 10 நாற்களுமான லீவு அனுமதிக்கப்படலாம், என்பதுடன் 3 மாதங்களுக்கு மேற்படாத லீவானது கணவரால் பெறப்படுகின்ற விவாகரத்தின் மீதோ அல்லது அவரால் பெறப்பட்ட விவாகாரத்தின் மீதோ அனுமதிக்கப்படலாம். அத்த கைய நாள்களுக்கு மேற்பட்ட எந்தவொரு லீவும் அரைச்சம்பளமாக இருக்கும். இதுவே அந்தசுற்றறிக் கையில் சொல்கின்ற விடயமாகும்.

இங்கு இரண்டு விடயங்களை பொதுவாக தெளிவுபடுத்த லாம். கணவர் இறந்தாலும் விவகாரத்து செய்தாலும் "இத்தா" இருக்க வேண்டும். முஸ்லீம்களுக்கு இது கட்டாயமானதாகும்.

உங்களது சகோதரிக்கு 2010ஆம் ஆண்டு 10 நாட்கள் அமய லீவு இருந்தால் அதை கழித்து விட்டு அவர் முழுச் சேவைக் காலத்திலும் 90 நாட்கள் சேமிப்பில் இருந்தால் அதைக் கழிக்கலாம். மிகுதியான 30 நாட்கள் அரைச் சம்பளமான லீவாக இருக்கும். நாலு மாதம் 10 நாட்கள் என்பதை 130 நாட்களாகக் கொண்டே இந்த கணிப்பு செய்யப்பட்டுள்ளது. 130 நாட்களும் சம்பளத்துடன் கூடிய விசேட லீவு என்று கருதினால் அது தவறாகும். இப்படி ஒரு சமூகத்தினருக்கு மட்டும் சலுகை இந்த நாட்டில் கிடைக்கும் என எதிர்பார்ப்பது தவறானதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.எஸ்.அருள்வேல்நாயகி

# குழந்தைக்கல்வி –5




## முன்பள்ளிகளின் தரங்காணல் குறிகாட்டிகள்

முன்பள்ளிகள் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் அதிகரித்துவருவதைக் காணலாம். இதனால் முன்பள்ளிகளின் தரமேம்பாடு பற்றிய பல்வேறு செயன்முறைகள் முன்னெடுக்கப்படுகின்றது. மாகாணக் கல்வி அமைச்சுகளினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகளும் டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறிகளும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் முன்பள்ளி பற்றிய சில குறிப்புக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.

- ஆசிரியர் புன்னகை நிறைந்த நட்புறவோடு கனிவோடு உரையாடுகிறார்.
- உன்னிப்பாகப் பிள்ளைகளின் கருத்துகளைக் கேட்கிறார்.
- ஆசிரியர் தொடர்புகொள்ள பிள்ளைகளின் மட்டத்திற்கு இறங்குகின்றார்.
- பிள்ளைகளைப் பெயர் சொல்லி அழைக்கிறார்.
- பிள்ளைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உணர்வு பூர்வமாக உதவுகிறார்.
- பேதங்காட்டாது அனைவரையும் சமமாக மரியாதையுடன் நடத்துகிறார்.
- விளையாட்டுத் துறையில் வளர்ந்தோர் சிறியோர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் ஒருவரை ஒருவர் மதித்து மரியாதை செய்வர்.
- பிள்ளைகளுக்கு எட்டும் வகையில் விளையாட்டுப் பொருட்களை ஒழுங்காகவும் அழகாகவும் வைத்திருத்தல்.
- பிள்ளைகளின் பார்வை மட்டத்திற்கு அவர்களது செயற்பாடுகளை காட்சிப்படுத்துதல்.
- முன்பள்ளி கட்டடத்தின் உள் வெளிப்புறங்கள் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் இருத்தல்.
- உள்ளும் புறமும் செயற்படும் வகையில் அமைதியும் கலகலப்பும் நிறைந்த சமநிலைப் பேணும் சூழலைப் பேணுதல்.
- ஒரே நேரத்தில் எல்லோரும் பங்குகொள்ளக் கூடியதான ஒரு மணித்தியாலத்திற்கு அதிகரிக்காது வகுக்கப்பட்ட தினக்கால அட்டவணை பேணல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு பாட அலகில் ஆகக் கூடிய நேரம் 30 நிமிடமாகும். நிலத்திலோ கதிரையிலோ பிள்ளைகள் அமைதியாக இருப்பதற்கு 10 நிமிடங்கள் எடுக்க வேண்டும்.

- எழுதப்பட்ட தினச் செயற்பாடுகள் 2 மணி கொண்டதாக பிள்ளைகள் விரும்பிய நேரத்தில் நேர்த்தெடுத்து கற்றல் நிலையங்களில் சுற்றித் திரிந்து சுதந்திரமாக செயற்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
- விரும்பும் நேரத்தில் செயற்படத்தக்கதாக தனியாகவோ குழுக்களாகவோ செயற்பட 04 அல்லது அதிகமான கற்றல் மையங்கள் அமைத்தல் வேண்டும். ஒழுங்காகவும் சீராகவும் புதிய கற்றல் நிலையங்களை அறிமுகஞ் செய்தல் வேண்டும்.
- குழுக்களுக்கும் தனியாளுக்கும் கருத்துப் பரிமாறி சாதகமான ஊக்குவிப்பை வழங்க உரிய நேரத்தைக் கொடுக்க வேண்டும்.
- ஒவ்வொரு பிள்ளைக்கும் தமது பொருட்களை வைக்கத் தனித்தனி இடம் ஒதுக்க வேண்டும்.
- நிலத்திலிருந்து செயற்பட பாய் பயன்படுத்த வேண்டும்.
- உதவியாளர் பெற்றோர் தொண்டர் உதவிக தொகு 15 பிள்ளைகளுக்கு கீழ் ஒருவர் எனும் விகிதம் (15.1) பேணப்படுதல் வேண்டும்.
- ஆசிரியர் பெற்றோரைப் பெயர் குறித்து அன்புடன் வரவேற்று அனுசரித்தல்
- கவர்ச்சிகரமான முழுமையான பெற்றோர் மூலை பேணப்படுதல்.
- பெற்றோர்கள் பாடசாலைக்குக் கிரமமாக வந்து பாடசாலை நலனிலும் கரிசனை காட்டுவதை உறுதிப்படுத்தல்.
- இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது பெற்றோர் கூட்டங்கள் நடைபெறுதல். ஒவ்வொரு பிள்ளையினதும் வளர்ச்சி அபிவிருத்தி குறித்து பகிர்ந்து கொள்ளல்.
- பிள்ளைகளின் செயற்பாடுகளில் சிலவற்றை பாடசாலையில் ஆசிரியர் வைத்திருத்தல் மற்றும் சிலவற்றை பிள்ளைகளின் வீடுகளுக்கு அனுப்புதல் சிலவற்றைக் காட்சிப்படுத்துதல்.
- திருப்தியான முறையில் யாவருக்கும் உணவு பரிமாற நடவடிக்கை எடுத்தல். போசாக்குணவை உறுதிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாலர்களுடைய பாதுகாப்பைப் பேணல்
- குடிநீர் வசதி செய்து கொடுத்தல்.
- பாடசாலை முடிவில் பயன்படுத்திய பொருட்களை உரிய இடத்தில் மீண்டும் வைப்பதற்கு வழி செய்தல்.
- வீடு செல்லுமுன் ஒன்று கூடி வணக்கமும் வாழ்த்தும் கூறி வழி அனுப்பப்படுகிறது.



**மேல் கூறப்பட்ட செயற்பாடுகள் யாவும் முன்பள்ளியில் நடைமுறைப்படுத்தப்படும் போது பிள்ளைகளில் ஏற்படுத்தும் மாற்றங்கள்**

- தன் நம்பிக்கை வளர்கிறது.
- பிள்ளைகளின் கூட்டுறவுப் பண்பு உருவாக்கப்படும்.
- பிள்ளைகளின் சுதந்திர செயற்பாட்டுக்கு சந்தர்ப்பம் ஏற்படும்.
- பிள்ளையின் செயற்பாட்டை பாராட்டுவதன் மூலம் அவர்களிடையே சந்தோசம் ஏற்படுகிறது.
- பிள்ளைகளுக்கு நானும் செய்ய முடியும் என்ற தன் உணர்வு ஏற்படுகிறது.
- பிள்ளையிடம் வகுப்பறையை சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது.
- பிள்ளைகளுக்கு விரும்பிய கற்றல் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
- பிள்ளைகளிடம் வயதிற்கேற்ற கற்றல் இடம்பெறுகிறது.
- பிள்ளைகளுக்கு ஒழுங்கான கற்றல் செயற்பாடு இடம்பெறுகிறது.
- பிள்ளைகளின் விருப்பத்திற்கேற்ப கற்றல் செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
- பிள்ளைகள் குழுவாக சேர்ந்து செயற்பட சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
- பிள்ளைகளின் வயதிற்கேற்ற கற்றல் உபகரணங்கள் கையாள சந்தர்ப்பம்.
- பிள்ளைகள் தமது கருத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம்.
- பிள்ளைகளின் உடல் அபிவிருத்திக்கு பயிற்சி கிடைக்கிறது.
- பிள்ளைகள் நாம் கற்று கொள்கின்றோம் என்ற உணர்வு இல்லாது கற்றுகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறது.
- பெற்றோருக்கு வயதுக்கேற்ற கற்றல் இடம் பெற வேண்டும் என்ற தெளிவு ஏற்படுகிறது.
- வீட்டிலும் பிள்ளைகளுக்கு பல்வேறு கற்றல் சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற தெளிவு உருவாகிறது.
- பிள்ளைகளின் வளர்ச்சிக்கு போசாக்கு உணவின் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்ள சந்தர்ப்பம்.
- பிள்ளைகளுக்கு ஒழுங்கு முறைகளை பழகி கொள்ள சந்தர்ப்பம் உருவாகிறது.
- பிள்ளைகள் புதிய, புதிய விடயங்கள் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
- முன்பள்ளியில் செயற்பாடுகள் ஒழுங்காகவும் இடம் பெறும் போது பெற்றோருக்கு தாமும் உதவி புரிய வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது.
- பிள்ளையின் செயற்பாட்டை தட்டிக் கொடுப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
- பிள்ளைகள் ஒரு செயற்பாட்டை செய்து பார்ப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
- பிள்ளைகள் ஒரு விடயத்தை தெளிவாக கற்று கொள்ள சந்தர்ப்பம் உருவாகிறது.
- பிள்ளைகளுக்கு அடிப்படை கற்றல் பேண வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது.

இதனால் பாடசாலையில் மாணவர் வரவு அதிகரிப்புடன், சமூகத்தினால் ஆசிரியர்கள் பாராட்டப்படுவதுடன் முன் பள்ளியின் அபிவிருத்திக்கு உதவி புரிய பலரும் முன் வருவார்கள். இதன்மூலம் முன்பள்ளிகளில் தரவிருத்தி ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தா விண்ணப்பப் படிவம்

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

# ஆசிரியம்

**"Aasiriyam"** 180/1/50 People's Park, Colombo -11,
Tel: 011-2331475 E-mail :aasiriyam@gmail.com

முழுப் பெயர் ..........................................................................
..........................................................................

பாடசாலை முகவரி ..........................................................................
..........................................................................

அலுவலக முகவரி ..........................................................................
..........................................................................

தொலைபேசி/தொலைநகல் இல ..........................................................................

மின்அஞ்சல் முகவரி ..........................................................................

ஆசிரியம் அனுப்ப வேண்டிய முகவரி ..........................................................................
..........................................................................

இத்துடன் ரூபா..........................................................க்கான பணம்/ காசோலை
* காசோலை இலக்கம் .............................................. இணைத்துள்ளேன்.
*Commercial Bank: A/C No : 1120017031 (Chemamadu B/C)*

திகதி : கையொப்பம்

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## 'ஆசிரியம்'

| விளம்பரக் கட்டணம் | சந்தா விபரம் |
|---|---|
| பின் அட்டை - 10,000/- | தனி இதழ் - 50/- |
| உள்ளட்டை முன் - 8,000/- | ஆண்டு சந்தா - 600/- |
| உள்ளட்டை பின் - 5,000/- | ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) - 1,000/- |

**மேலதிக தொடர்புகளுக்கு :**

| | |
|---|---|
| தெ.மதுசூதனன்<br>077 1381747 / 011 2366309/ 021 2227147<br>மின்னஞ்சல்: *mathusoothanan22@gmail.com* | காசுபதி நடராஜா<br>0777 333890<br><br>மர்சூம் மௌலானா<br>077 4747235 |

"ஆசிரியம்" - படைப்புகள் அனுப்ப : *aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமடு

**பேராசிரியர் சபா.ஜெயராசா** அறிவு உற்பத்தியாக....

சேமமடு பதிப்பகம் 45 மாதங்களில் 25 பனுவல்கள்
தமிழ்க் கல்விச் சமூகத்துக்குக் கையளிப்பு...





UG.50, 52, People's Park, Colombo -11. T.P : 011-2472362, 2321905.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியம்

## தொடர்புகளுக்கு...

### யாழ்ப்பாணம்

புக்லாக் (ரவீந்திரன்) ....021- 2227290/077- 1285749
ந.அனந்தராஜ் ....077- 8293366
நெடுந்தீவு மகேஷ் ....077- 4687873

### கிளிநொச்சி

பெருமாள் கணேசன் ....077-0789749

### மன்னார்

ஜோதி புத்தக நிலையம் ....023-2222052
டி.கிறிஷ்டிராஜ் ....071-2261010

### வவுனியா

தா.அமிர்தலிங்கம் ...071-8457290
ஆ.விஜேந்திரன் ....077-4412518
சி.ரமேஸ் ...077-4744810
சு.பரமானந்தம் ....071-8457260
ந.பார்த்தீபன் ...077-6231859
அறிவாலயம் புத்தக நிலையம் ....024-4920733

### மட்டக்களப்பு

கி.புண்ணியமூர்த்தி ....077-7034528/065-2250114
ச.ஜெயராசா ....065-2225812/077-7249729
ச.மணிசேகரன் ....065-2248334/077-6635969
டிகநாதன் ....077-2482718

### அக்கறைப்பற்று

வி.கணேசரட்ணம் ....071-3914771/067-2277192

### அம்பாறை

அமீர் அலி ....077-2224025

### மாவனெல்லை

எம்.ஏ.எம்.நிஸ்தார் ....071-8257562

### மூதூர்

க.கனகசிங்கம் ....077-8730736

### கிண்ணியா

எம்.எஸ்.எம்.ஹனீபா ....0077-2344586

### திருகோணமலை

இ.புவனேந்திரன் ....026-2222426
ஆ.செல்வநாயகம் ....026-2224905/026-2222761
ச.தேவசகாயம் ....026-227345
சத்தியன் ....077-7294287

### அனுராதபுரம்

அன்பு ஜவஹர்ஷா ....071-0881950

### கொழும்பு

சேமமடு பொத்தகசாலை ....011-2472362
பூபாலசிங்கம் புத்தகசாலை ....011-2504266

### நுவரெலியா

குமரன் புக் சென்டர் ....052-2223416

### புஸ்ஸல்லாவை

ஜி.லோகேஸ்வரன் ....077-9706564/081-5619629

### பண்டாரவளை

பி.புண்ணியமூர்த்தி ....077-1155609

### ஹட்டன்

முரளி புத்தக நிலையம் ....051-7911571

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org